The Good Pastor

நல்ல ஆயன்

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறாடுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்." (அரு. 10:11-16.)

புத்தகம் 16. | மார்ச் 1918. | இலக்கம் 3.

PASTORAL LETTER.

சென்னை அதிமேற்றிராணியாருடைய நிருபம்.

சென்னை அதிமேற்றிராசனத்தைச் சேர்ந்த குருக்களுக்கும் கிறீஸ்துவர்களுக்கும் கர்த்தரில் ஆரோக்கியமும் ஆசீருமுண்டாவதாக.

சேசுக்கிறீஸ்துநாதரில் நமக்குப் பிரியமுள்ள சங்கைக்குரிய சகோதரர்களே, பிரியமான பிள்ளைகளே

சென்ற வருடம் நாம் உங்களுக்கெழுதின தபசுகால நிருபத்தில் விசுவாசமென்னும் புண்ணியத்தைப்பற்றியும், அப்புண்ணிய அனுசரணை விஷயத்தில் நசரேத்தூரில் வசித்துவந்த திருக்குடும்பம் நமக்குச் சிறந்த மாதிரிகையாயிருந்த தென்பதைப் பற்றியும் சொல்லலானோம். தேவசம்பந்தமான யுண்ணியங்களுக்குள் நம்பிக்கையானது இரண்டாவதாகும். இப்புண்ணியமும விசுவாசத்தைப்போலவே ஒவ்வொரு மெய்யான கத்தோலிக்கு குடும்பத்தினுடைய முக்கிய இலட்சணமாயிருக்க வேண்டியது.

விசுவாசம், நம்பிக்கை, தேவசிநேகம் என்னும் தேவசம்பந்தமான புண்ணியங்களை நாம ஞானஸ்நானத்தின் வழியாய்க் கிடைக்கப்பெறுகிறோம. ஞானஸ்நானத்தின்போதே சர்வேசுரனால அறிவிக்கப்பட்ட சத்தியங்களை விசுவசிக்கவும், அவரால் வாக்குத்தத்தஞ் செய்யப்பட்டவைகளை நம்பவும், அவரை நேசிக்கவும் வேண்டிய சக்தி நமக்கு அருளப்படுகிறது. இவ்வாறாக நமக்களிக்கபபடுகிற இச்சக்தியை நாம உபயோகப்படுத்திக்கொள்ளாவிடில் அது க்ஷீணித்துப்போகும். ஆனபடியால், நாம் விசுவாச, நம்பிககை, தேவசிநேக முயற்சிகளை அனுஷ்டித்துவரக் கடமைப்பட்டிருக்கிறோம். நாம் இப்புண்ணிய முயற்சிகளை அனுஷ்டிக்கத் தவறுவோமானால் ஒருபோதும் இரட்சண்ணியமடையமாட்டோம.

நம்பிக்கை என்னும் புண்ணியம் நமக்கவசியமானதும் அது நம்மால் கண்டிப்பாய் அனுஷ்டிக்கப்பட வேண்டியது

மானது—"நம்பிக்கையினால் நாம் இரட்சண்ணியத்தை யடைகிறோம்" (VIII, 24) என்று அர்ச். சின்னப்பர் உரோமையருக்கு எழுதியிருக்கிறார். திருக்குடும்பம் விசுவாசமுள்ள குடும்பமாய்ச் சீவித்து வந்ததுமல்லாமல், 'விசுவாசத்தின் சகோதரி' என்று சியன்னா பட்டணத்து அர்ச். கத்தரீனம்மாளால் அழைக்கப்படுகிற நம்பிக்கையுமுள்ள குடும்பமாய்ச் சீவித்துவந்தது. தேவ பராமரிப்பில் எட்டுணையும் சந்தேகங்கொள்ளாம லிருக்கச்செய்யும் நம்பிக்கையென்னும் இப்புண்ணியமே நம்முடைய ஆண்டவனுக்கும் அர்ச். சூசையப்பருக்கும அவர்களுடைய பிரயாணத்தில் இடுக்கண்களால் இம்சிக்கப்பட்டுத் தயங்கி நின்ற தருணங்களில் வழிகாட்டும் நட்சத்திரமாயிருந்தது. அவர்கள் மனித உதவி ஒத்தாசையின்பேரிலாவது, தங்களுடைய சுயபலத்தின்பேரிலாவது, அல்லது இப்பிரபஞ்ச சம்பத்துக்களின்பேரிலாவது தங்கள் நம்பிக்கையை வையாமல், "ஆண்டவரை நம்பினவன் எவனும் கலங்கி நின்றதில்லை" (சர்வப்பிரசங்கி II, 11) என்றறிந்து, ஆண்டவர்பேரிலேயே தங்கள் நம்பிக்கையெல்லாம் வைத்துவந்தார்கள். திருக்குடும்பம் சரீரசம்பந்தமாயும் ஆத்தும சம்பந்தமாயும் பட்டனுபவித்த துன்பங்களும் சஞ்சலங்களும இலேசானவையல்லவென்றும, அவை எண்ணிறந்தவையென்றும் நமக்குத் தெரிந்த விஷயமல்லவா? என்றாலும அவர்கள் இப்படியாகச் சோதிக்கப்பட்டபோது முறைப்படவுமில்லை, அவநம்பிக்கைக் கொள்ளவுமில்லை. அர்ச். சூசையப்பர் முறைப்பட்டாரென்று சொல்ல சுவிசேஷத்தில் ஒரு வார்த்தையுங்காணோம். தமக்குத் துனபங்கள் வந்து நேர்ந்தபோதெல்லாம் மௌனமாயிருந்தார். துன்பங்களே அவருடைய சீவியத்தின் பங்காயிருந்தது. அவருடைய துன்பங்களில் சேசுநாதரும் அர்ச். கன்னிமரியம்மாளும் பங்குபற்றினவர்களா யிருந்தார்கள். திருக்குடும்பத்துக் கென்னதான் வந்து நேர்ந்தபோதிலும் அவர்கள் கலக்கப்படாமல் பொறுமையா யிருந்தார்கள். மேலும் தங்களுடைய தகப்பனான கடவுளின்பேரில அவர்கள் வைத்த நம்பிக்கை தளர்வடையவுமில்லை.

நம்பிக்கை என்னவென்று ஞானோபதேசம் பின்வருமாறு நமக்கு விளக்கிக் காட்டுகின்றது:—

"நம்பிக்கையானது சர்வேசுரனால் நமக்கருளப்படும் சுபாவத்துக்கு மேலான வரம். இவ்வரமானது, சர்வேசுரனுடைய சித்தத்தின்படி நாம் நடக்கும்பட்சத்தில், அவர் நித்திய சீவியத்தையும், அதையடையவேண்டிய சாதனங்களையும் நமக்குத் தந்தருளுவாரென்று நம்மை உறுதியாய் நிச்சயிக்கச் செய்கின்றது." நித்திய சீவியமும் அச்சீவியத்தை யடைய வழிவகைகளும் நமக்குச் சந்தேகமற கிடைக்குமென்று நாம் ஸ்திரமாய் எதிர்பார்க்க நம்பிக்கையானது நம்மை உடன்படுத்துகின்றது. ஆம், இவ்விஷயத்தில் ஐயரவுப்படவும் அவநம்பிக்கைக்கொள்ளவும் நமக்கிடமில்லை. "சர்வேசுரனால் பொய்சொல்ல முடியாது. நியமித்திருக்கிற நம்பிக்கையைக் கைக்கொள்ளத்தக்கதாகத் தீவரித்துக்கொண்டு போகிற நமக்கு ஸ்திரமான ஆறுதலுண்டு. அப்படிப்பட்ட நம்பிக்கை நமமுடைய ஆததுமத்துக்கு ஸ்திரமும் உறுதியுமான நஙகூரம்" (எபிறேயர் VI, 18–19).

நித்திய சீவியத்தைச் சுதந்தரித்துக் கொள்ள அவசியமானவையெலலாம நமக்கருளப்படுமென்று உறுதியாய் நிச்சயிக்கபபட்டிருக்கின்றது. உலக சிநேகிதர்களிடததில பலதடவைகளில் பிரமாணிக்கமிலலை. மனிதா தாஙகள் செய்யும் வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவது அருமை. மனிதருடைய உதவி ஒத்தாசைகள் அனேகமாய் நிஷ்பலமாகிவிடுகின்றன. ஆனால், நாம் கைக்கொண்டிருக்கிற நம்பிக்கையோ சர்வேசுரன்பேரி லுள்ளதாயிருக்கின்றது. சர்வேசுரனும் "நாம் உன்னைவிட்டுப் பிரிவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று வசனித்திருக்கிறபடியால், நாம் நம்பிக்கையோடு ஆண்டவரே எனக்கு உதவியென்று சொலலவாகும்" (எபிறேயர் XIII, 56) "ஒவ்வொருவரும நித்திய சீவியத்தை யடையவேண்டுமென்பதே தெய்வசித்தம்" (அருளப்பர் VI, 40). சர்வேசுரன் உலகததை, அது தன கெதியை யடைய பொதுவாக தமமுடைய பராமரிப்பினால் காத்துக்காப்பாற்றி ஆண்டு

வராமல், விசேஷவிதமாய் நாம் ஒவ்வொருவரும், ஒவ்வொரு கத்தோலிக்குக் குடும்பமும் தத்தம் கதியை அடைய ஆண்டு நடத்திவருகிறார். கத்தோலிக்கு தாய்தந்தையருக் குண்டாகும் துக்கமும் சந்தோஷமும், அவர்கள் தங்கள் பிள்ளைகளின் ஜீவனோபாய விஷயமாயும், கத்தோலிக்குக் கல்வி விஷயமாயும் கொண்டிருக்கும் கவலையும், தாயானவள் வியாதியாயிருக்கும் தன் பிள்ளையைப்பற்றி படும் சஞ்சலமும், தகப்பனானவன் தன் குடும்ப சவரட்சணைக்குப்போதுமான சம்பாத்தியமில்லாமல் படும் கஷ்டமும் சர்வேசுரனுக்குத் தெரியாதவையல்ல. இத்துன்பங்கள் அத்தனையும் "நீங்கள் கேட்டுகொள்வதற்கு முந்தி உங்களுக்கு வேண்டியது இன்னதென்று அறிந்திருக்கிற" (மத்தேயு VI, 8). சர்வேசுரன் மட்டில் உங்களுக்குப் பூரண நம்பிக்கையுண்டென்று காட்டவும், நம்பிக்கை முயற்சிசெய்யவும் அவரா லுங்களுக் கருளப்படுகிற அத்தனை தருணங்களாயிருக்கின்றன. மெய்யாகவே நாம் எப்போதும் தேவ பராமரிப்பின் வழிப்பாடுகளைச் சரியாய் அறியமுடியாது. கபர்ணும் சமுத்திரத்தில் புசல் மும்முரமாயடித்தபோது சேசுநாதர் எப்படி நித்திரை செய்துகொண் டிருந்தாரோ, அப்படியே சர்வேசுரனும் சில தருணங்களில் நித்திரை செய்கிறவரைப்போல் காணப்படுகிறார் (மத்தேயு VIII). உங்களுடைய புண்ணியம் கடினமாய்ச் சோதிக்கப்படும் இத்தகய தருணங்களிற்றான் நீங்கள் உங்களுக்குள்ள பிரமாணிக்கத்தையும் நம்பிக்கையையும்கைசோரவிடப்படாது. அவநம்பிக்கைப்பட்டு "நாங்கள் நாசமாய்ப்போகிறோம்" என்று சொல்லாது, எவ்வளவுக்கு நீங்கள் சோதிக்கப்படுகிறீர்களோ, அவ்வளவுக்கும் சர்வேசுரன் மட்டில் திடனான நம்பிக்கைக் கொள்ளுங்கள். ஏனெனில் இவைகளினாற்றான் "நீங்கள் தேவசுபாவத்துக்குப் பங்காளிகளாகும்பொருட்டு மகா மேன்மையும் விலையேறப்பெற்றதுமான வாக்குத்தத்தங்களை அவர் நமக்குக் கொடுத்தருளினார்" (II இராயப்பர் I, 4). "நம்பிக்கையினால் நாம் இரட்சண்ணியத்தை யடைகிறோம். காணப்படுகிறதை நம்புகிறதோவென்றால் அது நம்பிக்கையல்ல. ஒருவன் தான் காண்கிறதை நம்புவானேன்? ஆனால் நாம் காணாததை நம்புகிறோமாகில் அது வருவதற்குப் பொறுமையோடு காத்துக்கொண் டிருக்கிறோம்" (VIII, 24-25) என்று அர்ச். சின்னப்பர் உரோமையருக் கெழுதியிருப்பதையும் நினைவுகூர்ந்து கொள்ளுங்கள்.

நம்பிக்கையைப்பற்றி ஞானோபதேசம் நமக்கு விவரித்திருப்பதை யோசிக்குமளவில், இப்புண்ணிய விஷயமாய் நாம் நிறைவேற்றவேண்டிய காரியம் ஒன்றேயொன்றென்று நமக்குத் தெரியவரும். அந்த ஒருகாரியம் யாதெனில், "நாம் தெய்வசித்தத்தை நிறைவேற்றினாலன்றி" மற்றப்படி நமக்கு நித்திய சீவியமும் அதையடைய வேண்டிய வழிவகைகளும் அருளப்படமாட்டா தென்பதேயாம். இதை நிறைவேற்றத் தவறுகிறவனுடைய நம்பிக்கை வீணாவதும் க்ஷீணித்துப்போவதுமாம் (பழமொழி I, 28). இப்பேர்ப்பட்டவன் சர்வேசுரன் தன்னிடத்தில் என்ன சித்தங்கொள்ளுகிறா ரென்று ஒருக்கால் நன்றாய் அறிந்துகொண்டாலும், தான் நிறைவேற்றவேண்டிய அக்கடமையை நிறைவேற்ற மனங்கொள்வதில்லை. ஆனபடியால் அவனுக்குள்ள நம்பிக்கை அவனை இரட்சிக்கமாட்டாது. சர்வேசுரன்மட்டில் உங்களுக்குள்ள நம்பிக்கையானது நீங்கள் உங்கள் இரட்சண்ணிய அலுவலைப் புறக்கணிக்கவாவது, உங்கள் கடமைகளைச் சுறுசுறுப்பாய் நிறைவேற்றத் தவறவாவது இடந்தராது. அதேனென்றால் எப்படி "கிரியைகளில்லாத விசுவாசஞ் செத்ததாயிருக்கின்றதோ," (யாகப்பர் II, 26) அப்படியே கிரியைகளில்லாத நம்பிக்கையும் செத்ததாயிருக்கின்ற தென்ப துண்மை.

நற்கிரிகைகளில்லாத நம்பிக்கை உயிரற்ற நம்பிக்கையாதலால், அப்பேர்ப்பட்ட நம்பிக்கையை, நம்பிக்கை என்று சொல்லாமல் துணிகரம் அல்லது அகங்காரம் என்றே சொல்லவேண்டியது. கன்னிமரியம்மாளும் சூசையப்பரும் தங்களுடைய நம்பிக்கையெல்லாம் சர்வேசுரன்பேரிலேயே வைத்திருந்தபடியால் அவருடைய ஆதரவிலேயே தாங்களிருந்து வந்தார்களென்று அவர்களுக்குத் தெரியும். ஆனால் அவர்களுக்குச் சங்கடநேரம் வந்தபோது

தெய்வசித்தப்படி பிள்ளையைத் தூக்கிக் கொண்டு எஜிப்துக்குப்போய்ச் சேர்ந்தார்கள் (மத்தேயு II, 14). அன்றியும் அவர்கள் சேசுநாதரைப் போக்கடித்துக் கொண்டபோது அவநம்பிக்கைப்படாமல் தங்களுடைய கடமையை நிறைவேற்ற "தங்கள் இனத்தாரிடத்திலும் அயலாரிடத்திலும் விசாரித்து காணுததினுல் அவரைத் தேடிக் கொண்டு ஜெருசலேமுக்குத் திரும்பிப்போனுர்கள் (லூக் II, 44–45).

விசேஷமாய் உங்களுடைய சோதனை காலங்களிலும் துன்ப காலங்களிலும் நீங்கள் கண்டுபாவித்து நடக்கவேண்டிய முன்மாதிரிகை யிவர்களே. எப்போதைக்கும் உங்கள் கடமைகளை நிறைவேற்றுங்கள். நீங்கள் எதைச் செய்ய சர்வேசுரனுக்குச் சித்தமோ அதைச் செய்யுங்கள். அதன் பின் சர்வேசுரன் நித்திய சீவியத்தையும், அதை யடைவதற்கவசியமான உபகரணங்களனைத்தையும் உங்களுக்குக் கட்டளையிடுவாரென்றும், அவரே யுங்களுடைய மேலான சம்பாவனையாயிருப்பாரென்றும் ஸ்திரமான நம்பிக்கையிலூன்றினவர்களாயிருங்கள் (ஆதி. XV, 1).

நமது அதிமேற்றிராசனத்தைச் சேர்ந்த எல்லா ஆலயங்களிலும் சிறிய ஆலயங்களிலும், மடங்களைச்சேர்ந்த கோவில்களிலும் ஐம்பதாம் நாள் ஞாயிறன்று வாசிக்கப்பட இந்த நிருபமானது 1918ஞு அர்ச். சின்னப்பர் மனந்திரும்பின திருவிழாவன்று கொடுக்கப்பட்டது.

சர்வேசுரன் உங்களனைவரையும் தமது பரிசுத்த பாதுகாப்பில் வைத்துக் காப்பாற்றுவாராக.

கிறீஸ்துநாதரில் உங்களன்புள்ள தந்தையாகிய

✠ அருளப்ப ஆலன்,

சென்னை அதிமேற்றிராணியார்.

ஆனந்த சுயஞ்சீவியாகிய தேவனுடைய பரமானந்த பரிமளம் வீசும் அரண்மனையில் பிரவேசம் பண்ணவேணுமானுல் இந்திரியங்களுக்கும் ஆத்தும தத்துவங்களுக்கும் தட்டுப்படும் பூமியின் பொருட்கள்பேரில் ஆசைவைக்காமல் வெறுங்கையனுய்க் கொடைதரு மெய்யனை நாடிப்போவாயாக. —(அர்ச். சிலுவை அருளப்பர்)

SISTER MARY OF THE DIVINE HEART.

திவ்ய இருதயத்தின் மரியம்மாள்.

(முன் தொடர்ச்சி.)

ஒப்போர்தோ மடத்தில் மரிசகோதரி செய்துவந்த வேலைகளில் சேசுவின் திரு இருதயத்தின் பக்தியை ஸ்திரமாய் ஸ்தாபித்ததே பிரதானமானதாம். மடத்து கோவிலின் பீடத்தின்மேல் சேசுவின் இருதய சுரூபத்தை வைத்து, அவரே மடத்துக்கு எஜமானன் என்றும், அதில் அவரே அரசாட்சி செய்யவேண்டுமென்றம் சொல்வாள்—இந்தப் பக்தியை இங்கு ஸ்தாபிப்பதற்கு சில தடைகள் இருந்தன. ஆனுல் நாளடைவில் அவைகள் முற்றும் ஒழிந்தன. 1895-ம் வருஷம் அவள் பின் வருமாறு எழுதுகிறுள் :—"சேசுவின் திரு இருதயத்தின் பக்தியை நமது எளிய வீட்டில் ஸ்தாபித்ததிலிருந்து, அவருடைய அன்பும் அருளும் நம் மத்தியில் வியாபித்து வருவதையும், லௌகீக, ஞான நன்மைகள் நமதுமேல் பொழியப்படுவதையும் நாம் நன்கு உணர்ந்து வருகிறோம்" என்பதே. மரிசகோதரியின் தேக சுகமானது எப்போதுமே பலவீனமானதாயும் மெலுக்கானதாயும் இருந்தது. அவள் ஒப்போர்தோவுக்கு வந்த ஆறு மாதத்திற்குள்ளாக, கொஞ்சம் நடந்தாலும், சம்பாஷித்தாலும், விரைவில் களைத்துப்போவாள். மெத்தையின்மேல் ஏறிப்போவது அவளுக்கு மெத்த கஷ்டத்தைக்கொடுக்கும். அவ்வருஷக் கடைசியில் முதுகு நோவால் மெத்த உபத்திரவப்பட்டாள். வைத்தியர் இதனை முதுகெலும்பின் வியாதியென்று கூறினர்கள். ஆனுல் அதைப்பற்றி அவள் கலவரப்பட்டவளல்ல. "நான் என் படுக்கையில் அறையப்பட்டு, எழுந்து நடமாடக்கூடாத ஸ்திதியி லிருக்கும்போது தான், சிலுவையில் அறையுண்ட நமது திவ்ய இரட்சகருடன் ஒத்திருப்பேன்" என்றுபுன்னகை பூர்த்து சொல்வாள். வைத்தியர் அவள் சற்று இளைப்பாறும்படியாக லிஸ்பனுக்குப் போகவேண்டுமென்று கற்பித்தார்கள். ஆனுல் அவள் அங்கு சென்ற சின்னுட்களுக்குப்பின் தன் மடத்

துக்குத் திரும்பி வரவேண்டியதாயிற்று. ஏனெனில், பச்சாத்தாப்பப் பெண்களில் ஒருவளுக்கு பைத்தியம் பிடித்ததால், அவள் விஷயமாய் சில ஜனங்கள் குழப்பம் செய்து, மடத்தின் நல்ல பெயருக்கு கெடுதி வருவிக்கப்போவதாகக் கேள்விப்பட்டு, மெத்த விசாரத்துடன் தீவிரமாய் ஒப்போர்தோ வந்து சேர்ந்தாள்.

கன்னியருக்கு விரோதமாய் சில துஷ்ட ஜனங்கள் மடத்தினருகே வந்து கூச்சலிட்டு குழப்பம் செய்வார்கள். சில சமயங்களில் தெருக்களில் அவர்களைக் கேலி பரிகாசம்செய்து அவமானப்படுத்துவார்கள். ஒருவிசை மடத்தின் கோவிலுக்குள் சேற்றைவாரி எறிந்தார்கள். மரிசகோதரி தன்னறையின் வெளி ஜன்னலைத் திறக்கும்போது பலதடவைகளில், "Jesuitess" (சேசு சபையாளே) என்று தெருவிலிருந்து உரத்த சத்தமாய்க் கூப்பிட்டு ஏளனம் செய்வார்கள். ஆனால் இச்சங்கடங்களின் மத்தியில் "இந்த ஏழை ஜனங்களுக்காகச் செபித்து பரித்தியாகம் செய்வதொன்றே நமது கடமை" என்று சொல்லி அமரிக்கையா யிருப்பாள்.

திவ்ய இருதயத்தின் மரி, அர்ச். ஆசீர்வாதப்பர் சபையின்மட்டில் மிகுந்த மதிப்பையும் பற்றுதலையும் வைத்திருந்தாள். அச்சபையின் புத்திரர்களில் ஒருவர் தன்னைப் புண்ணியவழியில் விசாரித்து நடத்தவேண்டுமென்று பெரிதும் விரும்பினாள். அவளுடைய கோரிக்கைக்கு அநுகூலமாகவே, ஓர் சம்பவம் நடந்தது. ஆஸ்திரியா தேசத்தின் செக்கௌ (Seckau) என்னப்பட்ட நகரின் ஆசீர்வாதப்பர் சபையைச் சார்ந்த சிரேஷ்டராகிய இல்தேபோன்சுஸ் ஷோபேர் (Ildephonsus Schober) என்ற குருவானவர் 1895-ம் வருஷத்தில் போர்துகால் தேசம் வந்திருந்தபோது, மரிசகோதரி அவரை அழைப்பித்து, ஒப்போர்தோ மடத்து கன்னியருக்கு ஞான ஒடுக்கம் கொடுக்கும்படியாக ஏற்பாடு செய்தாள். அக்காலத்தில்தான் கல்வியிலும், பக்தியிலும், ஞானத்திலும் கதித்த அந்த உத்தம குருவானவர் மரிசகோதரியின் ஞான நிலைமையை அறிந்துகொள்ளலானார். அவள் சர்வேசுரனால் மிகவும் நேசிக்கப்பட்டவளென்றும், அபூர்வமான அரிய பெரிய வரங்களைப் பெற்றவளென்றும், சர்வேசுரன் அவளை அகோசரமான புண்ணிய சாங்கோபாங்க மார்க்கத்தில் நடத்தி வருகிறாரென்றும் அறிந்து, அவளுக்கு நல்லாலோசனைகளைப்புகட்டி, அவளைத் திடப்படுத்தி நடத்தி வந்தார். சில காலமாய்த் தன்னுடைய ஞான சீவியத்தின் சோதனைகள், கிலேச சந்தேகங்களிடையில், தனது சிரேஷ்டர்களுடையவும் ஆத்தும குருவுடையவும் உதவியில்லாமல் வருத்தப்பட்டுக்கொண்டிருந்த மரிசகோதரிக்கு, இவ்வுத்தம குருவானவர் தேவாதீனமாய்க் கிடைத்ததானது பேருதவியாயிருந்தது.

இக்தருணத்தில் ஒப்போர்தோ மடமானது போதுமான வருவா யில்லாததினால் மெத்த கஷ்டதசை யடைந்திருந்தது. 400 பவுனுக்கு மேல் கடன்பட்டிருந்தது அம்மடம். அதைத் தீர்க்க நிர்வாகமுமில்லை. பச்சாதாபப் பாலர்கள் அநேகமாய்ச் சேர்க்கப்பட்டிருந்தார்கள். இவர்களில் ஒருவரை யெனினும் மடத்தி னடைக்கலத்தினின்று அனுப்பிவிட மரிசகோதரிக்கு மனமும் வரவில்லை.

ஒப்போர்த்தோ மடத்தில் ஆவரணம் (enclosure) திட்டமாய் அநுசரிக்கப்படும் பொருட்டு, அடைப்பு சுவர்களையும் கிராதிகளையும் ஸ்தாபிப்பதற்காக முயன்று வந்தாள். இவைகளை ஏற்படுத்துவதற்கும், முன்கூறிய மடத்தின் கஷ்டங்களை ஒழுங்குபடுத்துவதற்கும், ஒப்போர்தோவின் கர்தினால் ஆண்டவரைக் கண்டு, அவருடைய ஆலோசனைகளையும் அவசரமான உத்தரவுகளையும் பெற்றுக்கொள்ள வேண்டியதாயிருந்தது. அவரைக்கண்டு பேச குறித்த நாளில் சரியான நேரத்தில் வண்டி வராத தாமதத்தினால் கால் நடையாய் இரண்டரை மயில் தூரம் நடந்து போனாள். வழியில் பையன் ஒருவன் "Jesuitess" என்று பரிகாசமாய்க் கூவியழைத்தான். மரிசகோதரி அவனைத் திரும்பி உற்று நோக்கவே, அந்தப்பார்வையால் அவன் பயந்து ஓடி மறைந்துகொண்டான். பிறகு கர்தினால் ஆண்டவர் சமுகம் சென்று, தனக்குத் தேவையாயிருந்த உத்தரவுகளையும், ஆலோசனைகளையும், அவருடைய ஆசீர்வாதத்தையும் மனமகிழ்ச்சியோடு பெற்றுக்கொண்டாள்.

அவளுடைய நடை உடைபாவனையும், அடக்க ஒடுக்க மேரை மரியாதையும், அவளுடைய சம்பாஷணையும் கர்தினால் ஆண்டவர் அவள்மட்டில் மேலான அபிப்பிராயம் கொள்ளும்படியாகச் செய்தது. அதினால் அவர் மரிசகோதரியைப்பற்றி தன் கருத்துக்கும் அபிப்பிராயத்துக்கும் ஏற்ற உத்தம துறவியென்று வியந்து புகழ்ந்து கூறினார். அவள் மடத்தின் அபிவிர்த்திக்காகக் கொண்டுள்ள சிந்தனைகளையும்,

அடைப்பு விஷயமாய் செய்த ஏற்பாடுகளையும் அங்கீகரித்து ஆசீர்வதித்தார். இது நடந்த மூன்றுவாரத்துக்குப்பின். ஆவரணத்தின் கதவு போடப்பட்டது. அதின்மேல் "In Te Domine speravi non confundar in aeternum" "ஆண்டவரே நான் உம்மிடத்தில் என் நம்பிக்கையை வைத்திருக்கிறேன். நான் நித்திய காலத்திற்கும் வெட்கமடையேன்" என்ற திவ்யமான வாக்கியத்தை சித்திரித்து வைத்தனள். இதே வார்த்தைகள் தன் குடும்ப மாளிகையின் வாசலின் மேலும் வரையப்பட்டுள்ளன. ஆசீர்வாதப்பர் சபையின் சிரேஷ்டர்தான், மடத்தையும் புதிதாய்க் கட்டப்பட்ட ஆவரணத்தையும் அதின் சாவிகளையும் மந்திரித்து அதின் கதவை தாளிட்டு அச்சாவிகளை மரிதாயாருக்குக் கொடுத்தார். அவள் அவைகளை வாங்கி தேவமாதாவின் சுரூபத்தின் பாதத்தினடியில் வைத்தாள். இனி தனது திவ்ய பத்தாவுக்கு சிறைப்பட்டவளென்று தன்னுள்ளம் பூரிக்க தன்னை அழைத்து வருவாள்.

1896-ம் வருஷம் பெப்பரவரி மாதம் 8-ம் தேதி, ஆன்கர்ஸ் மடத்திலிருந்த அதிசிரேஷ்ட தாயார், சபை உடுப்பு தரித்த 50-வது வருஷ ஜூபிலி உற்சவத்தைக் கொண்டாடுவதற்காக, முஸ்திப்புகள் தாய் மடத்தில் நடந்தேறின. அச்சுபதினத்தில் மரிதாயார் ஆன்கர்ஸ் மடத்திற்கு போயிருக்க உத்தரவு பெற்றுக்கொண்டாள். ஜனவரிமாதம் 30-ம் தேதி ஒப்போர்தோவை விட்டு பயணப்பட்டாள்.

ஸ்பேயின் தேசத்தின் நகராகிய சலமான்காவை யடுத்த ஆல்பாதேதோர்மெஸ் என்னுமிடத்தில் அர்ச். தெரேசம்மாளின் அர்ச்சியசிஷ்ட பண்டங்கள், விசேஷமாய் அவளுடைய இருதயம் வெகு பூஜிதமாய்க் காப்பாற்றப்பட்டு வருகின்றது. மரிதாயார் இப்புண்ணிய ஸ்தலத்தை சந்திப்பதற்காக இவ்விடம் வந்தாள். இங்கு அவள் திவ்ய பூசைகண்டு நன்மைவாங்கினுள்.

இவ்விஷயத்தைப் பற்றி அவள் எழுதுவதாவது. "நன்மைவாங்கினபின் என் திவ்ய பத்தா என்னை அளவற்ற உருக்க நேசத்தோடு 'மரியே' என்று என் பெயரைச் சொல்லி அழைத்தார். என்னை இன்னுமதிக மதிகமாய்த் தம்மோடு ஐக்கிய மாக்கிக்கொள்ள விரும்புவதாகவும், அதற்கு அத்தாட்சியாக இதுவரையில் நான் பரிக்ஷித்தறியாத மனச்சமாதானத்தை நான் சுகிக்கப் போவதாகவும் கூறினுர்.—அர்ச். தெரேசா, அர்ச். ஜெர்த்ரூட், அர்ச். சியென்னு!கத்தரீன் இவர்களை எனக்குப் பாதுகாவலர்களாகவும், மேல்வரிசட்டமாகவும், தோழிகளாகவும் தந்தருளினர்" என்பதே. இப்பிரயாணத்தில் மரிதாயார் லூர்து நகர் சென்று, அங்கு அமலோற்பவ கன்னிகை தரிசனமான கெபியைக் கண்ணுற்று, அளவிலாப் புளகாங்கித மடைந்தாள். கடைசியாய் ஆன்கர்ஸ் மடம் வந்து சேர்ந்தனள். அங்கு நடைபெற்ற ஜூபிலி கொண்டாட்டத்தைத் தரிசித்தபின் ஜெர்மானியாவுக்குச் சென்றுள். மன்ஸ்டர் மடத்தைத் திரும்பவும் காண்பது அவளுக்குப் பூரிப்பாயிருந்தது. இங்கு 8-நாள் தங்கியிருந்தாள். இவ்விடம் தன் பெற்றோரையும் கண்டாள். ஆன்கர்ஸ் மடத்துக்குத் திரும்பிப் போனபோது அதிசிரேஷ்டதாயார் தன் சபை மடங்களை விசாரிக்க உத்தேசித்து, மரிதாயாரை தனக்குத் துணையாகத் தெரிந்துகொண்டு, அவ்விடங்களுக்கு அவளை அழைத்துக்கொண்டுபோனுள். இவ்வேலை முற்றும் முடிவதற்குள்ளாக அதிசிரேஷ்ட தாயார் வியாதியடைந்தாள். இவள் வியாதியாயிருந்த காலத்தில் மரிதாயார் அவளுக்கு வேண்டிய உதவியெல்லாம் செய்து வந்தாள். இச்சமயம் அதிசிரேஷ்ட தாயாருடன் பழகி அவளுடைய கருத்துகளையும் எண்ணங்களையும் அறிந்துகொள்ள ஏற்றதாயிருந்தது.

ஒப்போர்தோ மடத்தின் விஷயங்களைப் பற்றியும்சாவதானமாய் வார்த்தையாட இதுவே நல்ல தருணமாயிருந்தது. தன் சிரேஷ்ட தாயாருக்கு பூரணசுகம் விரைவில் உண்டாகாது என்று கண்டு, திரும்பி ஒப்போர்தோவுக்குப்போக உத்தரவு பெற்றுக்கொண்டாள்.

ஆனுல் மரிதாயார் ஒப்போர்தோவை யடைந்ததும், அவள் மிகவும் இளைத்து பலயீனப்பட்டிருப்பதை மடத்துக்கன்னியர் கண்டு கலக்கமுற்றூர்கள். இப்பலயீனம் அவள் செய்த பிரயாணங்களால் உண்டாயிருக்கலாம் என்று முதலில் கருதப்பட்டது. ஆனுல் நாளுக்கு நாள் அவளுடைய சுகம் குறைந்துகொண்டே மெத்த கேவல ஸ்திதிக்கு வந்துவிட்டது. சில வாரங்களுக்குள்ளாக நடப்பதற்குமுதலாய்ச் சக்தியற்றவளாகத் தோன்றினுள்.

அவளுக்குப் பசிதீபனமே கிடையாது. முதுகிலும், தலையிலும், முழங்காலிலும் கொரேமான வாதனை யனுபவித்தாள். மே மாதம் 21-ம் தேதி தான் படுத்த படுக்கையைவிட்டு எழுந்திருக்கக் கூடாமற் போயிற்று. வைத்தியர் இதனை முதுகெலும்போடு சம்பந்தப்பட்ட பாரிச வாதமென்

றும், இது அவளுடைய, கடும் உழைப்பினுல் வந்ததென்றும், இதை இனி குணமாக்க முடியாதென்றும், ஆனல் நீடிய இளைப்பாற்றியினுல் இன்னும்கொஞ்சகாலம்உயிர் நீடிக்கச்செய்யலாமென்றும் சொன்னர்கள். ஆகவே அவள் எழுதவாவது, வாசிக்கவாவது, மடத்தின் காரியாதிகளை நடத்தவாவது, கண்டிப்பாய் விலக்கப்பட்டிருந்தாள். வியாதியின் க்ஷ்டம் மும்முரமானது.—பலயீனம் அதிகப்பட்டது. மரணமும் நெருங்கிற்றென்று நினைக்கவேண்டியதாயிற்று. ஜூன் மாதம் 27-ம் தேதி மரி தாயார் தாமே கேட்டுக்கொண்டதின்பேரில், அவஸ்தைப் பூசுதலும் கொடுக்கப்பட்டது. இவளுடைய வியாதியைப் பற்றி பல இடங்களிலிருந்து அநுதாபக் கடிதங்கள் வந்த சீராயிருந்தன—அவளுடைய க்ஷேமத்தை விசாரிக்க வெளி ஜனங்கள் மடத்துக்கு ஓயாமல் வந்துகொண்டேயிருந்தார்கள். கன்னியரும் பச்சாத்தாபப்பாலரும் அழுத கண்ணீரும் கலங்கிய சிந்தையுமுள்ளவர்களாய் அவளுக்காக செபதபங்களைச் செய்து வந்தார்கள்—அவள் பூரணசுகமடைவதற்காகப் பிரசித்தமாய் ஸ்தாபகம்செய்யப்பட்ட தேவநற்கருணை முன்னிலையில் நவநாட் செபமும் செய்தார்கள்.

ஒப்போர்தோவின் கர்தினல் ஆண்டவர் அவளுடைய சுகத்தைப்பற்றி அநுதினமும் விசாரித்து வந்தார். அநுதாபக் கடிதங்களை எழுதி அனுப்பி அவளுக்கு தைரியமூட்டி வருவார். ஒப்போர்தோவின் கோவில்களிலெல்லாம் அவளுடைய உத்தரவின்பேரில் அவளுக்காக செபங்கள் ஒப்புக்கொடுக்கப்பட்டன.

அவளைக் காணுவதற்காக கர்தினல் ஆண்டவர் மடத்துக்கும் போனர். இவள் மட்டில் அவர் காண்பித்த இந்த விசேஷ தயவைக்கண்ட எல்லோரும் அதிசயித்தார்கள். இவளுடைய வியாதியின் கொரேத்தைத் தணிக்கவும், இவளுக்கு ஆறுதல் தரக்கூடிய நன்மைகளையெல்லாம் செய்யவும் ஒப்போர்தோவின் சீமாட்டிகள் ஒருவருக்கொருவர் போட்டியாய் வந்து ஒத்தாசைபுரிந்தார்கள். அவளுக்குச் சிகிச்சைசெய்ய தங்களுடைய வைத்தியர்களை அனுப்பினர்கள். ஒருவிசை அவள் விஷயத்தில் 12 டாக்டர்கள் ஒருங்குகூடி ஆலோசித்தார்கள். அவர்கள் கொடுத்த அவிழ்தங்களையும் செய்துவந்த சிகிச்சைகளையும் எல்லாம் அவைகள் எவ்வளவு கடினமாயிருந்தாலும், மெத்த பொறுமையோடு அவைகளை ஏற்றுக்கொள்வாள். அவள் எழுந்து நிற்கக்கூடாவிடினும் பாரிசவாதம் முற்றிப்போகாதவண்ணம் அவள் கொஞ்சமாவது நடக்க முயற்சிப்பது அவசியம் என்று வைத்தியர் கற்பித்தார்கள். இந்தச் சரீரமுயற்சிகள் அவளுக்கு மெத்த அருவருப்பையும் நோக்காட்டையும் வருவித்தன.

இவ்வித முயற்சியை செய்யும்போது மரி தாயார் சொல்வாள்: "நான் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியும் என்னை நமதாண்டவரின் இருதயத்தின் கிட்டே கொண்டுபோய் நிறுத்தி, காணமல் போன ஒரு செம்மறியாடு இரட்சண்ணியம் அடைய உதவுமானல் அதுவேபோதும்" என்பதே—வைத்தியர்கள் செய்துவந்த சிகிச்சைகளால் மரி தாயாரின் வியாதி சற்றும் குணப்படவில்லை. இனி அவள் எழுந்து நடக்க ஒரு போதும் முடியாது என்று சொல்லிவிட்டார்கள். படுக்கையில் எழுந்து உட்கார முதலாய் அவளுக்கு மெத்த கஷ்டமாயிருந்தது. மடத்து உபகாரிகளில் ஒருவள் லேசாய் தூக்கக்கூடிய மஞ்சம் ஒன்றை மரிதாயாருக்கு அனுப்பினள். அதிசிரேஷ்ட தாயாரிடமிருந்து தன்னைச சந்திக்க வந்த ஜனங்களை தன்னறையிலேயே காண உத்தரவு பெற்றுக்கொண்டாள். மடத்தில் சந்திப்பு கூடம் அவளிருந்த அறைக் கருகாமையில் அதே தளத்திலிருந்ததால், ஜனங்களைச் சந்திக்கிறதற்காக அவ்விடம் அவளைத் தூக்கிக்கொண்டு போவார்கள். தோட்டம் வரையிலும் சில சமயத்தில் அவளைத் தூக்கிப்போவதுண்டு. ஆனல் அவ்வளவு தூரம் போய் திரும்புவதென்றல் மெத்த வாதனை யனுபவிப்பாள்.

அதினல் உண்டாகும் களைப்பு தெளிய சில நாட்களாகும். அவளுடைய மஞ்சத்தைத் தூக்க நாலு சகோதரிகள் வேண்டும். இவர்கள் வெகு சாக்கிரதையோடு அசைவு ஆட்டமின்றி அதைத் தூக்கி எடுத்தல்வேண்டும். ஓர் சொற்ப அதிர்ச்சியும் நோயாளிக்கு அகோரமான உபத்திரவத்தைக் கொடுக்கும். இப்பேர்ப்பட்ட கஷ்ட உபத்திரவ நிலைமையில் அவள் மூன்று வருஷ மிருந்தாள்.

ஆகிலும் மடத்தின் காரியாதிகளையெல்லாம் மெத்த அநுகூலத்துடன் நடத்திவந்தாள். சிரேஷ்ட தாயாரின் சகல கடமைகளையும் ஒரு குறைவில்லாமல் மெத்த விமரிசையாய் அவள் நிறைவேற்றிவந்தது அதிசயமாயிருந்தது. சர்வேசுரனுடைய தோத்திரத்துக்காகவும், ஆத்துமங்களின் இரட்சண்ணியத்துக்காகவும் அல்லும்

பகலும் ஓயாமல் உழைத்து, சிலுவையில் அறையுண்ட அவளுடைய திவ்ய பத்தாவுடன் அதிக மதிகமாய் ஐக்கியப்பட்டு, அர்ச்சியசிஷ்டதனத்தின் உன்னதமான வீரிய அந்தஸ்தை அடைந்தாள். சிரேஷ்டதாயாரின் அலுவலினின்று முழுதும் தன்னை நீக்கவேண்டும் என்று அவள் விரும்பினாள். ஆனால் கர்தினால் ஆண்டவர் இதற்கு ஒப்பவில்லை. இவளுக்குப் பதிலாய் மற்றவர்கள் செய்யக்கூடிய நன்மையைப் பார்க்கிலும் பதின்மடங்கு அதிகம் இவளுடைய நிழலொன்றே செய்யவல்லது என்று அவர் சொல்லி மரிதாயாரை அவ்வேலையினின்று நீக்கவில்லை. இந்தக்காலத்தில் அவளுடைய ஆத்துமகாரியங்களை விசாரிக்க ஆத்தும குருவானவர் அருகில் இல்லை. ஆஸ்திரியாவிலிருந்த ஆசீர்வாதப்பர் மடத்தின் சிரேஷ்டருக்குத் தான் ஞான விஷயங்களை நிருபங்கள் மூலமாய் தெரிவித்துவந்தாள்.

ஆனால் பக்தியுள்ள ஓர் குருவானவர் தன்னருகிலிருந்து தன்னை நடத்திவருவது அவசரமாயிருந்தது. இதைப்பற்றி தன் திவ்ய பத்தாவை நோக்கி மன்றாடினாள். அவரும் புண்ணியத்தில் சிறந்த ஓர் குருவை மரிதாயாருக்கு அனுப்பச் சித்தமானார். அக்காலத்தில் ஒப்போர்தோவின் குருமடத்துக்குச் சிரேஷ்டராயிருந்த சங்கைக்குரிய தெயதோனியுஸ் தெகாஸ்த்ரோ சுவாமியாரை மரிதாயார் தன் ஆத்தும குருவாயிருக்கக் கேட்டுக்கொண்டாள். ஆனால் அவர் அநேகாநேக ஆத்துமங்களை விசாரித்து நடத்தும் வேலைகளிலிருந்தபடியால் துவக்கத்தில் இதற்குச் சம்மதிக்கவில்லை. கடைசியாய் மரிதாயார் வேறொரு குருவானவரைத் தெரிந்துக்கொள்ளும் வரையிலாகிலும் அவரைத் தன் ஆத்தும காரியங்களை விசாரிக்கக் கேட்டுக்கொண்டதின்பேரில் சம்மதித்தார். இவருக்கு மரிதாயார் தன் ஆத்துமத்தில் நடந்தேறிய காரியங்களை கபடின்றி திறந்த மனதோடு வெளிப்படுத்திவந்தாள்.

ஆனால் அவர் இந்த உத்தம புண்ணியவதியின் மட்டில் மெத்த விமரிசையாயும் ஜாக்கிரதையாயும் நடந்துகொண்டார்.

இவர் அவளிடத்தில் நடந்த காரியங்களையெல்லாம் தனக்கு எழுதி அறிவிக்கும்படியாகக் கற்பித்தார். அவருடைய கட்டளையின்பேரில் தான் மரிதாயார் தன் சீவிய சரித்திரத்தை எழுதத்தொடங்கினாள். மரிதாயார் மரித்த சின்னாட்களுக்குப் பின்னர் இவ்வுத்தம குருவானவர்தான் மயிலாப்பூருக்கு மேற்றிராணியாராக நியமிக்கப்பட்டார்.

இச் செய்தியை அவள் சாகிறதற்கு முன்னர் தீர்க்கதரிசனமாய் அறிந்து, அவருக்கு நமதாண்டவர் பேரால் வெளிப்படுத்தியும் இருக்கிறாள். மூன்று வருஷகாலமாய் அவள் சாகுந்தனையும் அவளுடைய ஆத்தும குருவானவராய் இருக்க அவர் பாக்கியம் பெற்றார். சேசுவின் திரு இருதயத்தின் செல்வ பத்தினியாகிய மரிதாயாருடைய அரிய பெரிய வரங்களையும், பராக்கிரம புண்ணிய செயல்களையும், அவள்மட்டில் நடந்துள்ள தேவ கிருபையின் அதிசயங்களையும் கண்ணுற்ற அவருடைய பாக்கியமே பாக்கியம். மரிதாயார் பாரிச வாதப்பிணியால் தன் படுக்கையை முதலாய் விட்டு நடக்கத் திராணியற்றவளாய்க் கிடந்த இந்தக் கஷ்டகாலத்தில்தான் நமதாண்டவர் அவளுக்கு ஏராளமான உன்னத வரப்பிரசாதங்களை அளித்துவந்தார். தமது திவ்ய நேசத்தின் அத்தாட்சிகளை பன்முறை அவளுக்குக் காட்டினார். தமது திவ்ய இருதயத்துக்கு உலக முழுவதையும் தமது பிரதிநிதியாகிய பாப்பானவர் ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று அவருக்கு எழுதி அறிவிக்கத் தாம் அவளைத் தெரிந்துகொண்டதாக வெளிப்படுத்தினார். இவ்விஷயம் அவளுக்கு மூன்றுவிசை அறிவிககப்பட்டதின் பின்தான் அவளுடைய ஆத்துமகுரு அதைப்பற்றி கவனிக்கலானார். கடைசியில் இவளுக்கு வெளிப்படுத்தப்பட்ட விஷயத்தில் யாதொரு மோசத்துக்கு மிடமில்லையென்று திட்டமாய்க் கண்டுணர்ந்து பரிசுத்த பிதாவுக்கு அவள் நிருபம் எழுதி அறிவிக்கும்படி உத்தரவு அளித்தார். அந்தக்காலத்தில் அவள் எழுதுக்கோலைப் பிடிக்க முதலாய்ச் சக்தியற்றவளாய் இருந்தபடியால் அவரே அவளுடைய காரியதரிசிபோல் அவள் உச்சரித்த ஒவ்வொருவார்த்தையையும் எழுதலானார். இந்த நிருபத்தில் தன்னுடைய துணிவையும், தன் சுகயீனத்தை முன்னிட்டு ஓர் காரியதரிசியைத் தெரிந்துகொண்டதையும் மன்னிக்க பரிசுத்த பிதாவை மன்றாடுகிறாள். பிறகு நமதாண்டவர் உலகமுழுவதையும் தமது திவ்ய இருதயத்துக்குக் காணிக்கையாக தமது பிரதிநிதியானவர் ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று அவளுக்குக் கற்பித்ததை அறிவிக்கிறாள். இந்தக் காணிக்கையால் உண்டாகும் நன்மைகளைப்பற்றியும், அதைச்செய்யும் விதத்தைக்குறித்தும் விவரித்து தன் நிருபத்தை விடுத்தாள். பதின்மூன்றும்

சிங்கராயர் இந்நிருபத்தை வாசித்து உள்ளமுருகி சொல்லொண்ணு வியப்படைந்தார். ஆனல் அவ் வருஷத்தில் யாதொன்றும் செய்தவரல்ல. மரி தாயார் தன்னுடைய நிருபம் வத்திக்கான் அரண்மனைக்குப் போய்ச் சேர்ந்ததென்றுமாத்திரம் அறிந்துகொண்டாளே தவிர வேறொன்றையு மறியாதவளல்ல. ஆனல் அவள் கிஞ்சித்தும் மனதைரியத்தை இழக்காமல், தனது திவ்ய பத்தாவின் மட்டில் பூரண நம்பிக்கையுடையவளாயிருந்தாள்.

S. M.

(தொடரும்.)

GNANAMANI, III PART.

ஞானமணி 3-ம் பாகம்.

50-ம் அதிகாரம்.

அபிராமி ! அபிராமி ! என்னை மறந்துவிட்டாயோ ?.

டிக்ருஸ் ஸ்வாமியார் ஆஸ்பத்திரிக்குப் போய்ச் சேர்ந்து நர்ஸை விசாரித்தபோது, அவள் "நீர் நேற்று கொண்டுவந்து ஆஸ்பத்திரியில் விட்ட மனிதனை ஆபத்திலிருக்கிறுன். அவன் கிறீஸ்துவனே அஞ்ஞானியோ தெரியாது. நான் வியாதிக்காரன கிட்டப்போய் பல கேள்விகேட்டு, குருவானவரை அழைத்து வரவா ? என்றபோது பேசாமலிருந்தான். பாதிரியாரைப் பார்க்க விரும்புகிறுயோ? என்றதற்குத் தலை அசைத்தான். புரோடஸ்டாண்டு பாதிரியாரா ? என்றேன். அதற்கு அவன் வேண்டாமென்றுன். ரோமான் குருவானவரைப் பார்க்க உனக்கு மனதா ? என்றபோது ஆம் என்று தலை சயிக்கினை காட்டினதின்மேல், நான் பங்குஸ்வாமியாருக்குக் கடிதமெழுதி யனுப்பினேன்" என்றுள்.

ஸ்வாமியார் நர்ஸுடன் பேசியபின் வியாதிக்காரன் படுத்திருந்த கட்டிலின் கிட்டப் போனபோது வியாதிக்காரன் தன் துணியில் முடிபோட்டிருந்த முடிச்சை ஓர் கையால் பிடித்துக்கொண்டு கண்ணை மூடிக்கொண்டிருந்தான். அவன் நித்திரை செய்கிறுனே அல்லது விழித்திருக்கிறுனே வென்று பார்க்கும்படி மெதுவாய் இருமினர் ஸ்வாமியார்.

சத்தத்தைக் கேட்ட வியாதிக்காரன் தன் அருகாமையில் நிற்கும் ஸ்வாமியாரைப் பார்த்துக்கொண்டிருக்கும்போது, அவர் அவன் கிட்டப்போய், "நேசனே உனக்கு எப்படி யிருக்கிறது ?" என்றுர்.

வியாதிக்காரன்.—எனக்கு உண்டாகும் வலி நோயைப் பொறுக்க முடியவில்லை.

ஸ்வாமியார்.—என்னுல் கூடிய சகாயத்தை உனக்குச் செய்யும்படி வந்தேன்.

வியா.—உன்னுல் என்ன சகாயம் செய்யக் கூடும் ?

அந்நேரத்தில் நர்ஸ் வியாதிக்காரன் கிட்டப்போய், "இவர்தான் குருவானவர், ரோமான் கத்தோலிக் குருவானவர். நீ ஆசித்தபடி உன்னைப் பார்க்க வந்திருக்கிறுர்" என்றுள்.

வியா.—சரி, சரி.

ஸ்வா.—ஸ்நேகிதனே! நான் சத்தியவேத குரு. உன் ஆத்தும விஷயமாக வேண்டிய உதவிசெய்ய வந்திருக்கிறேன. உன் வேதம் இன்னதென்று தெரியப்படுத்தினுல் பெரும் உபகாரமாகும்.

வியா.—என் வேதமா ?

ஸ்வா.—ஆம்.

வியா.—நான் ஒரு வேதக்காரன் அல்ல. பலவேதக்காரன—நான இந்து, துலுக்கன், புத்தன், கிறீஷ்டியன்.

ஸ்வா.—கிறீஸ்துவனுனல் எந்த வகுப்பைச் சேர்ந்தவன் நீ ?

வியா.—அநேக வகுப்பில் சேர்ந்திருக்கிறேன்—சர்ச் ஆவ் இங்லண்டு, வெஸ்லியன, மெதடிஸ்ட், குவேக்கர்ஸ், பாப்டிஸ்ட், ரோமான, லுத்தரன் முதலிய வேதங்களில் சேர்ந்திருக்கிறேன்.

ஸ்வா.—கர்த்தர் ஸ்தாபித்தது ஒரே ஒரு சத்திய வேதமா யிருக்கக்கொள்ள, பலவேதங்களை நம்புவதால் பயன் இல்லை ; இரக்ஷண்யமும் அகப்படாது.

வியா.—உன் வேதம் ?

ஸ்வா.—என் வேதம் சத்தியவேதமாகிற கத்தோலிக் வேதம். மேலும் நான் அப்பரம வேதத்தை போதிக்கும் குரு.

வியா.—(தன்கையில் பிடித்துக்கொண்டிருந்த துணியிலுள்ள முடிச்சை அவிழ்க்கும்படி குருவானவருக்கு சயிக்கினை காட்டினான்.)

ஸ்வா.–(அதை அவர் யவிழ்த்தவுடனே அதிலுள்ள தேவமாதா சுரூபத்தைக் கண்டு அதிசயித்தார். மேலும் அந்த சுரூபம் தமது கழுத்தில் வெகு காலம் அணிந்துகொண்டிருந்த சுரூபமென்று அறிந்துகொண்டபோது அவருடைய வியப்பு இருமடங்காயிற்று.)

வியா.—(அந்தச் சுரூபத்தை கையில் வாங்கிக்கொண்டு) இதை நீ நம்புகிறியோ, என்றான்.

ஸ்வா.—இது தேவமாதா சுரூபம். இதை பக்தி விஸ்வாசத்துடன் வணங்குவதால் ஆத்துமத்துக்கும் சரீரத்துக்கும் நன்மையுண்டாகுமென்று நம்புகிறேன். இது உமக்கு எப்படி கிடைத்ததென்று தயவுசெய்து சொல்வீரா?

வியா.—(சற்றுநேரம் பேசாமல் மவுனமாயிருந்து, ஸ்வாமியாரை இரண்டு மூன்று விசை உற்று உற்றுப் பார்த்து) நீ யெனக்கு இதை கொடுத்ததில்லையோ?

ஸ்வா.—(அதிக ஆச்சரியங்கொண்டு) உமக்கு இதை நான் கொடுக்கவில்லையே, 4-அல்லது 5-மாதங்களுக்குமுன் ஒரு திருடனுக்கு கொடுத்தேன்.

வியா.—நீ கண்கள் கட்டப்பட்டு கைதியான போதா?

ஸ்வா.—ஆம் (என்று அதிசயித்தார்.)

வியா.—ஒரு மலை கெபியிலா?

ஸ்வா.—ஆமாம்! அது உமக்கு எப்படித் தெரியும்?

வியா.—நான்தான் அவன்.

அப்போது ஸ்வாமியார் பெருவியப்புகொண்டு, வியாதிக்காரனை சற்று நேரம் கவனமாய்ப் பார்த்தபோது, தாம் கள்ளர் கையில் அகப்பட்டுக்கொண்டிருந்த காலத்தில், கட்டிவில் படுத்திருக்கும் வியாதிக்காரனே, தமக்கு அன்னபானமுதலியவற்றைக் கொண்டுவந்து கொடுத்தவனென்று முகஜாடையால் அறிந்து, "உமது முகத்திலுள்ள காயங்களாலும் இரத்தக்கறையாலும் உம்மை யின்னாரென்று கண்டுபிடிக்க என்னால் கூடவில்லை. இப்போது நீர் யாரென்று தெரியும்.

"நான் உமக்கு அப்போதைக்கப்போது கற்றுக்கொடுத்த பிரியதத்தமந்திரம் தெரியுமா?"

வியா.—தெரியும் (என்று தலை யசைத்தான்.)

ஸ்வா.—நீர் எப்படி யிங்குவந்து சேர்ந்தீரென்று உமக்குத் தெரியுமா?

வியா.—தெரியாது.

ஸ்வா.–நேற்றையத்தினம் நான் பிரயாணஞ்செய்யும்போது, காயம்பட்டு பேச்சு மூச்சின்றி ரஸ்தாவில் விழுந்துகிடந்த உம்மை நான் என் வண்டியிலேற்றி ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவந்தேன். அப்போது நீர் இன்னாரென்று எனக்குத் தெரியவில்லை.

வியா.—அப்படியா? (என்று சுரூபத்தை முத்திசெய்தான்.)

ஸ்வா.—உமது சௌக்கியம் கேவலமாயிருப்பதால் நீர் சத்தியவேதத்தில் சேர்ந்து தேவத்திரவிய அனுமானங்களைப் பெறுவது உத்தமமாகும்.

வியா.—நானா? நானா? எனக்கு இரக்ஷண்யம் அகப்படாது.

ஸ்வா.—அப்படி அவநம்பிக்கைப்படவேண்டாம். சர்வேசுரன் தயையுள்ளவர். அவருடைய தயைக்கு மட்டில்லை.

வியா.—என்னை நீர் இன்னம் சரியாய் அறியவில்லை.

ஸ்வா.—நீர் கள்ளரிடத்தி லிருந்தவரல்லவோ?

வியா.—கள்ளரிட மிருந்தேன், வாஸ்தவந்தான். ஆனால் நான் கட்டிக்கொண்ட பாவாக்கிரமங்கள் கொஞ்சமல்ல. கணக்கு வழக்கிலடங்காது அப்பாவதோஷங்கள். நான் கட்டிக்கொண்ட பாவங்களை நீ கேட்டால் இந்த க்ஷணமே இங்கிருந்து ஓடிப்போவாய்! இப்பேர்ப்பட்டவர்களுக்கு இரக்ஷண்ய மேது?

ஸ்வா.—அப்படிச் சொல்லவேண்டாம். நமது கர்த்தர் பாவிகளை இரக்ஷிப்பதற்காகவே இப்பூவுலகத்துக்கு வந்தார். அந்தப் பாவங்களுக்காகவே படாத பாடெல்லாம் பட்டார். தமது இரத்தத்தைச் சிந்தினார். கடின மரணமடைந்தார். அந்த இரத்தத்தின் பலத்தால் சகலவித பாவதோஷங்களும் விமோசனமாய்விடும். இவைகளுக்காக உத்தமமனஸ்தாபப்பட்டு, இனி அவைகளை கட்டிக்கொள்வதில்லை யென்று உறுதியான பிரதிக்கினை செய்துகொண்டால் அவை பொறுக்கப்படும்.

வியா.—இருக்கலாம்; ஆனல் என் பாவங்களுக்கு விமோசனம் உண்டென்று நம்பேன்!

ஸ்வா.—சுவாமி மரிக்கும்போது, அநேக பாவாக்கிரமங்களைக் கட்டிக்கொண்ட கள்ளனுடைய பாவங்களுக்கு மன்னிப்புக்கொடுத்தார். மரியமதலேனளுக்கும் அப்படியே பாவ மன்னிப்புத் தந்தார். இன்னும் கணக்கற்ற பாவிகள் தங்கள் பாவங்களுக்கு மனஸ்தாபப்பட்டு அவருடைய பாதத்தில் விழுந்தபோது அவர்களுக்கும் பொறுதி அளித்தார். ஆகையால் உத்தம மனஸ்தாபத்துடன் அவரை நீர் மன்ருடுவீராகில் சந்தேகமற உமது பாவங்களையும் மன்னிப்பார் சர்வ இரக்கமுள்ள சர்வேசுரன்.

வியா.—உன் வாக்கு நிச்சயந்தானு?

ஸ்வா.—சத்தியமான வாக்கு.

வியா.—என் பாவங்கள் கொஞ்சமானவைகளல்ல. கணக்கிலும் தோஷத்திலும், ஐயையோ! அவைகளைப்பற்றி நினைக்கும்போது............ ஆ! பயமுண்டாகிறது! கடவுள் முதலாய் பொறுக்கமாட்டார்...எப்படி பொறுப்பார் அவர் அத்தனை பாவங்களை? பணத்துக்காக எத்தனையோ வேதங்களை மாற்றிக்கொண்டேன்!...எத்தனையோ அனியாய அக்கிரமங்களைச் செய்தேன்!... எத்தனை பேரை கொள்ளையடித்தேன்!...சிந்தனை வாக்குக் கிரிகையால் கட்டிக்கொண்ட பாவங்களுக்கு கணக்கேது, வழக்கேது?...தெரியாமல் அல்ல, தெரிந்தே அவை பாவமென்று நன்ருய் அறிந்துகொண்டே, என் ஆங்காரத்தால் செய்தேன்!...ஐயையோ! இவைகளுக்கு மன்னிப்பு எப்படி உண்டாகும்?...ஆ! என் பிறப்புக்குச் சாபம்!...என் கூட்டாளிகளுக்குச் சாபம்!...என் ஸ்நேகிதருக்கும் எனக்கு ஆலோசனை கொடுத்தவர்களுக்கும் சாபம்! ..சாபம்!...முடியாச்சாபம் (என்று சுரூபத்தைகையில் செட்டியாய்ப் பிடித்துக்கொண்டு கண்ணை மூடி துக்கிக்கும்போது, அவன் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்துகொண்டிருந்தது.)

அப்போது ஸ்வாமியார், அவன் பக்கத்தில் முழங்காலிலிருந்து அவனுக்காக சர்வேசுரனைப் பார்த்து உருக்கத்துடன் மன்ருடி, எழுந்து தமது உள்சட்டை சாக்கிலிருந்த ஸ்வாமி பாடுபட்ட சுரூபத்தை யெடுத்து கையில் பிடித்துக்கொண்டு வியாதிக்காரனை அண்டி:

"ஸ்நேகிதனே, இதோ! பார் நமது பாவங்களுக்காக சிலுவையில் அறையுண்ட கர்த்தரை! சமுத்திரத்தைவிட இவருடைய காருண்ய தயை விஸ்தாரமானது! இந்தா, இந்த சுரூபத்தை முத்திசெய். அவருடைய கடின பாடுகளுக்கு உன் பாவங்களே காரணமென்று நினைத்து உன் பாவங்களை சங்கீர்த்தனஞ் செய்வாயாகில், அவைப் பொறுக்கப்பட்டு, உன் மனதில் மனச்சந்தோஷமும் சமாதானமுமுண்டாகும். இதைப் பரீக்ஷித்துப்பார் வேண்டுமானல் (என்று சொன்னதை வியாதிக்காரன் கவனமாய்க் கேட்டபின்) "நல்லது, நல்லது" என்று சற்றுநேரம் கண்ணை மூடியிருந்த பின் "நல்லது அப்படியே ஆகட்டும்" என்ருன்.

இதுவரையில் நர்ஸ் வியாதிக்காரன் கிட்ட நின்றுகொண்டு அடிக்கடி அவனுக்கு சூப்பு குடிக்கக் கொடுத்துக்கொண்டிருந்து, அவனுக்குப் பாவசங்கீர்த்தனஞ் செய்ய மனதுண்டானவுடனே, அவள் அவ்விடத்தை விட்டு பின்வாங்கினுள்.

வியாதிக்காரன் பாவசங்கீர்த்தனஞ் செய்யும்போது அடிக்கடி பெருமூச்சுடன் அழுவான். "ஆ! சுவாமீ! என்பேரில் தயவாயிரும்" என்பான். "எனக்கு ஒரு நரகம் பேதாது" என்பான். "இதுவரையில் என்னை நரகத்தில் தள்ளாமல் நீர் பொறுமைகாட்டினது சகல புதுமைகளிலும் பெரும் புதுமை" யென்பான்.

இவ்வாறு அவனுக்குண்டாகும் மிதமிஞ்சின மனஸ்தாபத்தால் பாவசங்கீர்த்தனத்தை நிறுத்தி நிறுத்தி செய்யும்போது, குருவானவர் அப்போதைக்கப்போது, பால், சூப்பு, முதலிய ஆகாரங்களை குடிக்கக் கொடுத்துக்கொண்டிருந்தார். இவன் பாவசங்கீர்த்தனஞ் செய்து முடிக்க சுமார் இரண்டுமணி நேரத்துக்கு அதிகமாகவே பிடித்தது.

பாவசங்கீர்த்தனம் முடிந்தவுடனே, வியாதிக்காரன் குருவானவரை நோக்கி, "ஸ்வாமீ, நான்செய்த பாவங்களுக்கு நீர்கொடுத்த அபராதம் மகா சொற்பமாச்சுதே! என் பாவம் பொறுக்கப்படுமோ?" என்று வினவினபோது, ஸ்வாமியாருடைய தாயாராகிய அபிராமியம்மாள் ஆஸ்பத்திரிக்குப்போய், டிக்ரூஸ் ஸ்வாமியாரை யணுகி, "மணி நாலாகப்போகிறது, இன்னம் சாப்பிட வரவில்லையே! நேற்று ஒரு சந்திபிடித்து, இராத்திரி பதினொருமணி மட்டும் பாவசங்கீர்த்தனங் கொடுத்து, இன்றுகாலே போசனங்கூட சரியாய்ப் புசியாமல் இங்கு இவ்வளவு நேரம் தங்கி

யிருக்கிறீர்களே!" என்று சொன்னதைக்கேட்ட ஸ்வாமியார், "அம்மா, இங்கே எனக்குப் பெரிய விருந்து அகப்பட்டது" என்று புன்னகைப்புடன் சென்னர்.

ஸ்வாமியார் முகம்வாடி இளைத்துக் களைத்து இருப்பதைக் கண்ட நர்ஸ், "ஸ்வாமீ, நீங்கள் போய் எதாகிலும் ஆகாரம் புசிப்பது உத்தமம்" என்ருள்.

அப்போது ஸ்வாமியார் தமது தாயாரைப் பார்த்து, "அம்மா! இந்த வியாதிக்காரர் யார் தெரியுமா?" என்றுகேட்க "எனக்குத்தெரியா" தென்று வியாதிக்காரன் கிட்டவந்தாள். அப்போது ஸ்வாமியார் "நேற்றுக் காலையில் ரஸ்தாவில் காயப்பட்டுக்கிடந்தவர் இவர்தான். இவருக்குத்தான் நீங்கள் கட்டு கட்டினீர்கள்" என்றதைக்கேட்ட அபிராமியம்மாள், "ஐயோ, பாவம்! இவர்தானு?" என்று கட்டிலை நெருங்கி, தலைகுனிந்து, "எப்படி யிருக்கிறீர் ஐயா?", என்று வியாதிக்காரனை விசாரித்தாள்.

அபிராமியம்மாள் ஆஸ்பத்திரிக்கு வந்து ஸ்வாமியாருடன் பேசிக்கொண்டிருக்கும்போது வியாதிக்காரன் அபிராமியம்மாள் பக்கமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தான். தன் சௌக்கியத்தைப்பற்றி விசாரிக்கும் அபிராமியம்மாளை வியாதிக்காரன் துக்கத்துடன் கொஞ்ச நேரம் பார்த்தப்பின்:

"அபிராமீ!" என்ருன் வியாதிக்காரன். இந்த அன்னியன் தன் பெயரை உச்சரிப்பதைக் கேட்ட அபிராமி அம்மாளுக்கு பயமும் அதிசயமும் உண்டாகி, சற்று பின்னிட்டாள். மறுபடியும் வியாதிக்காரன் "அபிராமி! அபிராமி! என்னை மறந்துவிட்டாயோ?" என்ருன்.

அப்போது அபிராமியம்மாள், வியாதிக்காரனைச் சற்றுநேரம் உற்றுப்பார்த்து, அவனுடைய குரல் சத்தத்தையும் கவனமாய்க் கேட்டபின், தன் குமாரனுகிய டிக்ரூஸ் ஸ்வாமியார் காதில் "இவர் தான் உங்கள் தகப்பனுர்" என்ருள்.

"இவர்தானு என் தகப்பனுர்!" என்று ஸ்வாமியார் அதிசயிக்க, இவர் இதுவரையிலும் போசனமின்றி இளைத்துக் களைத்து இருந்தபடியாலும், இப்பெரும் பாவியாகிய வியாதிக்காரன் அற்புதமாய் மனந்திரும்பினதால் அதிக சந்தோஷங்கொண்டிருந்தபடியாலும், இப்போது அந்த வியாதிக்காரனே தன் தகப்பன் என்கிற செய்தியை அவர் அறியவே, மிதமிஞ்சின சந்தோஷங்கொண்டவராய் மூர்ச்சையாய்க் கீழே விழ இருக்கும் சமயத்தில், நர்ஸும் அங்கு நின்றுகொண்டிருந்தவர்களும் அவரைத் தாங்கிப்பிடித்து, பக்கத்து அறைக்குக் கொண்டுபோய் அவருடைய முகத்தில் குளிர்ந்த ஜலம் அடித்து விசிறவே, அவருக்கு மறுபடியும் தெளிவு உண்டானது.

தாமதியாமல் அவரை வண்டியில் எற்றி அறை வீட்டுக்குக் கொண்டுபோய் விட்டு போசனம் செய்யும்படி செய்தாள் நர்ஸ்.

ஆஸ்பத்திரியில் நடந்த சங்கதியெல்லாம் அறிந்த பங்கு ஸ்வாமியார் அதிசய சந்தோஷத்துக்குள்ளாகி, சர்வவல்லபம் பொருந்திய சர்வேசுரனைப் புகழ்ந்து ஸ்துதித்தார்.

அன்னேரத்தில் அபிராமியம்மாள் தன் நிர்ப்பாக்கிய புருஷன் இந்த தேசத்திற்குவர என்ன காரணமென்பதை யோசனை செய்துகொண்டு, அங்கேயே முழங்காலிலிருந்து வியாதிக்காரனைப் பார்த்து "இங்கு எப்படி வந்தீர்?" என்று வினவினுள்.

வியாதிக்காரன் அபிராமியம்மாளுடைய இருகரங்களையும் பிடித்து, உருக்க நேசத்துடன் முத்திசெய்து, "அபிராமி! என் இருதய நேசத்துக்குரிய அபிராமி! என் பாதகங்களைப் பொறுத்துக்கொள்ள மாட்டாயோ? தேனிலும் இனிமையான அபிராமி? நான் உனக்குப் புரிந்த பாதகங்கள் கொஞ்சமல்ல. அவைகளுக்கு மன்னிப்பு கொடுப்பாயோ?" என்று மகா துக்க துயரத்துடன் அழுதபோது, அபிராமியின் மனமுருகி, சந்தோஷத்தாலும் துக்கத்தாலும் பேசவாய்வராமல் தன் முந்தானையால் வியாதிக்காரனுடைய கண்களைத் துடைத்தாள்.

மறுபடியும் வியாதிக்காரன் அபிராமியைப் பார்த்து "ஆ! அபிராமி, என் நேசபத்தினி! நானே உன் நிர்ப்பாக்கியபுருஷனுன சலமோன். இப்போது உன்னைப்பார்க்க எனக்கு முகமில்லை. வெட்கமும் நாணமும் அதிகரிக்கிறது. பெண்ணைப்பிறந்த உன் சுகுணங்களையும் நன்னெறியையும், எனது துற்குணத்தையும் துஷ்ட நடத்தையையும் யோசித்துப் பார்க்கும்போது, அபிராமி, ஐயோ! பேச முதலாய் நாவெழவில்லை. உன் அயோக்கியமான புருஷனுக்கு மன்னிப்பு கொடாயோ?" என்று விம்மி விம்மி அழத்தொடங்கினுன்.

அப்போது அபிராமி தன் புருஷனுக்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லி, "பரவா

யில்லை, கடந்துபோன சங்கதி இப்போது என்னத்துக்கு?" என்று சலமோனுடைய சண்ணீரைத் துடைத்தாள்.

"எனது பிரிய அபிராமி! எனக்கு பொறுத்தல் தரமாட்டாயோ? நான் உனக்குப் புரிந்த பாதகங்களும் துரோகங்களும் கொஞ்சமல்ல. அதுகளை நினைக்கும்போது என் நெஞ்சங் கலங்கி பதைக்கின்றது" என்று பெருமூச்சு விடுவதைக் கண்ட அபிராமி "துக்கப்படாதேயுங்கள். நான் அப்போதே எல்லாவற்றையும் மறந்துவிட்டேன். அதெல்லாம் இப்போது சந்தோஷமாக மாறிவிட்டது. மனங்கலங்கி துக்கப்படுவதால் உங்கள் வியாதி அதிகரிக்கும்" என்று சொல்லி அவனை ஆற்றித் தேற்றினாள்.

வியாதிக்காரனோ அதிக துக்க துயரங் கொண்டவனாய்த் தன் மனைவியை இரக்க அன்புடன் நோக்கி, "அபிராமி! உன்னைப் பார்த்தவுடனே உனக்கு நான் புரிந்த தின்மைகளும் பாவதோஷங்களும் பட்டாளம்போல் என் கண்களுக்குமுன் வந்து நிற்கின்றன.

"நான் உனக்குச் சொன்ன பொய்புரட்டும், செய்த சத்தியப்பிரமாணமும் திருட்டும், உன்னை அடித்த அடியும், உதைத்த உதையும், மிதித்த மிதியும் என் கண்முன் நிர்கின்றன. மதுபானஞ் செய்து உன்னைத் திட்டின திட்டும், அவலக்ஷணமான வார்த்தையும், வருவித்த நிந்தை அவமானமும் மறையா நிழல்போல என் கண்முன் நிற்கின்றன! எப்படி யிதை மறப்பேன்? நீயும் இத்தனை பாவதோஷங்களை யெப்படி பொறுப்பாய்?" என்று பெருமூச்சுவிட்டு அழுவதைக்கண்ட அபிராமி யம்மாளின் மனமிளகி கண்ணீர் சிந்திக்கொண்டு "என். வீணாய் கஸ்திப்படுகிறீர்கள்?" என்றாள்.

சலமோன் சற்றுத் துக்கத்தை யடக்கி சில நேரம் கண்ணைமூடி மௌனமாயிருந்து, தன் மனைவியைப்பார்த்து: "அபிராமி, நான் உன் இருதயத்தைக் குத்தின அம்புகளில் அதிக கூரியதும் உனக்கு அதிக வியாகுலத்துக்குக் காரணமானதுமான பாதகத்தை உன்னால் பொறுக்கக்கூடுமோ?" என்று வாய்க்குள் புலம்புவதைக் கேட்ட அவன் மனைவி: "சகலத்தையும் பொறுத்தேன், சகலத்தையும் மறந்துவிட்டேன்" என்றாள்.

"நீ யென் கருத்தை கண்டுபிடிக்கவில்லை அபிராமி! நான் நமது அருமையான குழந்தையை யெடுத்துக்கொண்டு ஓடிப்போய் அப்பாலகனை விற்றுப்போட்டதைக் கூட மன்னித்தாயோ?" என்று அழுகையுடன் வினவக் கேட்ட அவன் மனைவி: "அதையும் பொறுத்துக்கொண்டேன்" என்றாள்.

THE TEMPTATION OF OUR LORD.

நமது கர்த்தர் பசாசால் சோதிக்கப்பட்டது.

ஆதிமனிதனாகிய ஆதாம் பசாசினால் சோதிக்கப்பட்டுத் தன்னையும் தன்னுடைய சந்ததியாராகிய நம்மையும் பாவத்துக்கும், பாவத்தினால் நேர்ந்த தண்டனைக்கும் உள்ளாக்கினான். பரம திரித்துவத்தின் இரண்டாமாளானவரும் நம்முடைய கர்த்தருமாகிய சேசுக்கிறீஸ்துநாதர், ஆதிமனிதனால் உண்டான பாவத்தையும், அதனால் வந்த தண்டனையையும் போக்கி, மனுக்குலத்தை, மீளவும் அது தானிருந்த தேவ இஷ்டப்பிரசாத அந்தஸ்தில் நிலைநிறுத்த மனங்கொண்டு, மனிதனாகப் பிறக்கச் சித்தமானார்.

பாவத்தை யழித்துப் புண்யத்தை நிலைநிறுத்த அவர் பாவத்துக்கு உற்பத்திக்காரணமாயிருந்த பசாசோடு போராடி ஜெயங்கொண்டு, பாவிகளான நாமும் அவ்வாறு செய்யத்தக்க வழி காட்டி யிருக்கிறார். இதெப்படியென்று தபசுகாலத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை சுவிசேஷத்தில் சுருக்கமாய்க் காட்டப்பட்டிருக்கின்றது.

சேசுநாதர் வனாந்தரத்துக்குச் சென்றார். அவர் சென்றவிடம் மனுஷ சஞ்சாரமில்லாததும், காட்டு மிருகங்கள் குடியிருந்ததும், முட்செடிகள் அடர்ந்ததும், முற்காலத்தில் தபமுனிவர் மேசியா (Messias) வின் வருகைக்கு அவாவோடு எதிர்பார்த்துக்கொண் டிருந்ததுமாம். ஆண்டவர் வனாந்தரத்துக்குச் சென்றது மாரிகாலம். அவ்விடத்தில் நாற்பது நாளும் நாற்பது இரவும் ஒன்றும் புசியாமலும் பானம் பண்ணாமலும் சுத்த உபவாசமாயிருந்தார்.

மகா தீர்க்கதரிசியாகிய மோசெஸ் (Moses) என்பவர் பழைய ஏற்பாட்டை யூதர்களுக்குக்

கொடுக்கிறதற்குமுன் நாற்பது நாளும், நாற்பது இரவும் ஏகாந்தத்தி லிருந்ததுபோல், நமதாண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதரும் புது ஏற்பாட்டை சகல ஜாதி ஜனங்களுக்கும் அறிவிக்கிறதற்குமுன் நாற்பது நாளும் நாற்பது இரவும் தனிவாசராயிருந்தார். தொடங்கப்போகிற திருத்தொழிலுக்கு ஜெபத்தினலும் தபத்தினலும் தக்க ஆயத்தம் பண்ணிக்கொண்டு வந்தார். நாற்பது நாளிரவும் பகலும் செய்த உபவாசம் முடியவே, சத்திய வேதத்தைப் போதிக்கவும் திருச்சபையை ஸ்தாபிக்கவும் சமயமாயிற்று. ஆனல் அவ் வனந்தரத்தை விட்டு வருவதற்கு முன் மனுஷ சஞ்சாரமில்லாத அந்த விடத்தில் திடீரென்று அவருக்கு ஒரு ரூபம் தோன்றியது. அது யாது? சோதனை செய்பவனகிய பசாசின் வடிவமாகும். அப்பசாசு ஆதிமனிதரை முற்காலத்தில் மயக்கித் தன் வசப்படுத்திக்கொண்டது போல் இப்போதும் சோதனை செய்து ஆண்டவரைக் கெடுக்க வந்தது. நமதாண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதர் மனிதனே அல்லது கடவுளோ வென்று பசாசுக்குத் தெரியவில்லை. கடவுளா யிருந்தால் மாட்டுக்கொட்டகையில் பிறந்திருப்பாரோ? எரோதென்பவனுக்கு அவர் பயந்து நடுநடுங்கி அந்நிய தேசத்துக்கு நடுச்சாமத்தில் ஓடிப்போகவேண்டியதாகுமோ? தச்சுத் தொழில் செய்யும் ஓர் எளியவனது புத்திரனக முப்பது வருடகாலம் வசித்தல் தகுமோ? ஆயினும் இவர் ஞானஸ்நானம் பெற்று ஆற்றிலிருந்து கரை ஏறினவுடன் பரமண்டலம் திறக்கப்பட, ஆகாயத்திலிருந்து "என் நேச குமாரன் இவரே" என்று அசரீரியான குரலோசை யுண்டாயிற்று. புறு வடிவமும் இவர்மேல் இறங்கி வந்தது. உலகமுண்டானது முதல் இத்தன்மை ஒருவருக்கும் சம்பவிக்கவில்லை.

மேலும் மெசியா வரவேண்டிய காலமும் நெருங்கியது. இவர் மெசியா தானே? என் இராச்சியத்தை அழிக்கவந்தவர் இவர்தானே? அப்படியாயின் என் இராச்சியத்தை அழிக்கிறதற்குமுன் நான் இவரை நாசம்பண்ண வேண்டியது. இவர் மனிதனயிருந்தால் நான் சூட்சமாய்ப் பின்னப்போகிற வலையில் அகப்பட்டாலும் அகப்படுவார். கடவுளாயிருந்தால் இவர் கடவுளென்றாகிலும் தெரியவரும். அதன்பிறகு என்ன செய்யவேண்டியதென்று பார்த்துக்கொள்வேன், என்னும் கபட குணத்துடன் ஆண்டவருக்கு முன்வந்து நின்று பரிதாபம் நிறைந்த குரலோடு பேச ஆரம்பித்தது. "ஐயோ, நாற்பது நாளாக இரவும் பகலும் அன்னபான மில்லாமல் சுத்த உபவாசமாயிருந்தீர்களே! இப்போது உங்களுக்கு மிகவும் பசியாயிருக்குமே! நீர் அனுசரிக்கவேண்டிய தபமும் முடிந்துவிட்டது. ஏன் இன்னும் வருத்தப்படவேண்டியது? இதோ அருகில் ஒரு கல் இருக்கின்றது. நீர் சர்வேசுரனுடைய குமாரனயிருந்தால் இந்தக் கல்லை அப்பமாக்கிவிடலாம். உங்களுக்குச் சர்வ வல்லமையுமுண்டு; ஏன் சதாகாலமும் பிதாவின் சித்தத்துக் கெதிர்பார்த்துக்கொண்டிருக்க வேண்டியது? பிதாவைப்போல் உமக்கு சர்வ வல்லமையுமுண்டே; ஒரேயொரு வார்த்தையால் இதை அப்பமாக்கிப் பசியைத் தீர்த்து இளைப்பாறலாமே" என்று மொழிந்தது.

ஆண்டவர் பசாசின் கபட உபாயத்தை யறிந்து "நீர் சர்வேசுரனுடைய குமாரனயிருந்தால்" என்னும் வாக்கியத்துக்குப் பதில் சொல்லாமல், மனுஷன் அப்பத்தினல் மாத்திரமல்ல, சர்வேசுரன் வாயினின்று புறப்படும் எந்த வார்த்தையாலும் பிழைக்கின்றான். மனுஷனை பிழைப்பிக்க கடவுளுக்கு அப்பம் தவிர வேறெந்த வழியுமில்லையோ? யூதர்கள் நாற்பது வருஷகாலமாய் வனந்தரத்தில் திரிந்தார்கள். மனுஷ சஞ்சாரமில்லாத அந்தவிடத்தில், அப்பத்தைப் புசித்துத்தானே பிழைத்தார்கள்? மோட்சத்திலிருந்து மன்னவெனும் போசனம் பொழிந்தது. ஆதலால் கடவுள் சித்தத்துக்கு விரோதமாக நடவாமல் அவர்மேல் முழுநம்பிக்கையாயிருப்பதே தகும்" என்று திருவுளம் பற்றினர்.

பசாசு தோல்வியடைந்தும் ஆண்டவரை எளிதில் விட்டுவிட்டதில்லை. ஒரு தந்திரம் பலிக்காவிட்டால் மற்றொரு தந்திரத்தால் மயக்கி வசப்படுத்திக்கொள்ள முயற்சிசெய்யும். இவர் கடவுளின்மேல் கொண்டிருந்த முழு நம்பிக்கையினல் சோதனையை மறுத்துவிட்டபடியால் அந்த நம்பிக்கையைக்கொண்டே இவரை யழிக்க வேண்டியதென்று, இவரை ஜெருசலேமென்னும் திருநகரத்துக்குக் கொண்டுபோய், தேவாலயத்தின் சிகரத்தில் இவரை நிறுத்தி, "இந்தவிடத்திலிருந்து கீழேபோகவேண்டியதாயின் படிகள் வழியாக இறங்கவேண்டியதல்லவா? ஆனல் அப்படிச்செய்வது உங்களுடைய மகத்துவத்துக்குப் பொருந்தாது, நீர் சர்வேசுரனுடைய குமாரனல்லவா? ஆதலால் ஒரே குதியாய்க் கீழே குதியும். கைகால் ஒடிந்துபோமென்று சற்றேனும்

அஞ்சவேண்டாம். ஏனெனில் உம்மைக் காக்கும் வண்ணம், கடவுள் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார்.

"உம்முடைய பாதம் ஒருவேளை கல்லில் மோதி இடருதபடிக்கு, அவர்கள் உம்மை தங்கள் கரங்களில் ஏந்திக்கொள்ளுவார்களென்று எழுதப்பட்டிருக்கிறது நீர் அறிந்த விஷயந்தானே. மேலும் எல்லோரும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற மெசியா நீர் அல்லவா? மெசியா என்பவர் திடீரென்று மோட்சத்திலிருந்து மகிமைப் பிரதாபத்தோடு இறங்கி வருவாரென்பது யூதர்களுடைய உத்தேசம். இதோ பாரும்! நகரத்து ஜனங்கள் யாவரும் தேவாலயத்துக்கு வந்திருக்கின்றனர். நீர் அவர்கள் மத்தியில் திடீரென்று குதித்தால் ஓ! இவர் தான் மெசியா, இவருக்காகத்தான் இத்தனை வருஷகாலம் எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம். இவர்தான் நம்மை மீட்டு இரட்சிப்பவர் என்று ஆர்ப்பரிப்போடும் சந்தோஷத்தோடும் உம்மை ஏற்றுக்கொள்ளுவார்கள். நீங்கள் நிறைவேற்ற வேண்டிய வேலையை சுலபமாயும் அநுகூலமாயு முடித்துவிட சுருக்கமான வழிகாட்டிவிட்டேன்; குதியும் குதியு"மென்று வற்புறுத்திக் கூறியது.

சேசுநாதர் "நீர் சர்வேசுரனுடைய மகனு?" வென்று கபடமாய்க்கேட்ட கேள்விக்கு மறுமொழி சொல்லாமல் சர்வேசுரனுடைய மகனுயிருந்தாலும், இல்லாவிட்டாலும் அவரை ஒருக்காலும் சோதித்தலாகாதென்னும் அருத்தமாக "உன் தேவனுகிய கர்த்தரைச் சோதியா திருப்பாயாக" வென்று எழுதப்பட்டிருக்கின்றது. ஒரு கெடுதியும் உண்டாகாதபடி நல்லவர்களுக்குத் தமது சம்மனசுக்களை காவலாக அவர் வைத்திருப்பது மெய்யே. ஆனுல், ஆபத்தை வலியத்தேடுகிறவர்களை அந்த ஆபத்திலிருந்து மீட்டு இரட்சிக்க சம்மனசுகளுக்குக் கட்டளையிட்டதில்லை" என்று பிரத்தியுத்தர மளித்தார்.

பிறகு பசாசு அவரை உயர்ந்த பர்வதத்தின் மேல் கொண்டுபோய் ஒரு நிமிஷப் பொழுதில் உலக இராச்சியங்கள் யாவற்றையும், அவைகளின் மகிமையையும் அவருக்குக் காட்டி "இவை எல்லாம் எனக்குச் சொந்தம். இவற்றின்மேல் முழுச் சுவாதீனம் கொண்டிருக்கின்றேன். ஆனுல் மெசியாவானவர் என்னிடத்திலிருந்து இந்த இராச்சியங்களையெல்லாம் பிடுங்கிக்கொள்வார் என்று ஜனங்கள் சொல்லுகிறுர்கள். அப்படி அபகரித்துக்கொள்ள நீர் என்னேடு போராடவேண்டியது. உமக்கு ஏன் அவ்வளவு கஷ்டம்? அவ்வளவு பிரயாசை? நானே இவை எல்லாம் உமக்கு வலிய கொடுக்கப்போகின்றேன். சந்தோஷமாய் பெற்றுக்கொண்டு அரசாட்சிசெய்து வாழ்ந்திரும். ஆனுல் ஒரு காரியம் மாத்திரம் கேட்டுக்கொள்ளுகிறேன். அஃதென்ன வென்றுல், இப்போது நீர் என் முன்பாக சாஷ்டாங்கமாய் விழுந்து எனக்கு ஆராதனை செய்யுங்கள். ஆராதிப்பீராகில் இப்பொழுதே இந்த இராச்சியங்கள் யாவற்றையும் உமக்கு முழு சொந்தமாக்குகிறேன்" என்று கூறியது. அப்போது சேசுநாதர் கோபத்தோடு "சாத்தானே, அப்பாலே போ; உன் தேவனுகிய கர்த்தரையே ஆராதித்து அவரொருவரையே சேவிப்பாயாக" என்று எழுதியிருக்கிறதென்றுர். அப்போது இதோ! தேவதூதர்கள் அணுகி அவருக்குப் பணிவிடை செய்தார்கள்.

"நேசர்களே, நமதாண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதர் பசாசினுல் சோதிக்கப்படுவதற்கு இஸ்பிரீத்து சாந்துவினுல் வனுந்தரத்துக்குக் கூட்டிக்கொண்டுபோகப்பட்டார்"என்னப்படும் சுவிசேஷ வசனத்திலிருந்து நீங்கள் அறிந்து அநுசரிக்கவேண்டியதென்னவென்றுல், இவ்வுலகத்திலிருக்கிற வரையிலும் நம்முடைய ஆத்தும சத்துருக்களோடு ஓயாமல் அல்லும் பகலும் போராடவேண்டியது. தந்திர சோதனைகளில்லாமல் சீவிக்க எவராலும் முடியாது. பாவிகளும், புண்ணியவான்களும், உலகத்தை வெறுத்து சந்நியாசம் பூண்டவர்களும், இல்லற வாழ்க்கையில் அமர்ந்தவர்களுமாகிய சகலரும் சோதனையால் பீடிக்கப்படுவார்கள். பசாசு ஒருவரையும் விட்டுவிடாது. ஏற்கெனவே பாவியாயிருந்தால் மேன்மேலும் அவனை பாவத்தில் நிலை நிறுத்தவும் புண்ணியவானு யிருந்தால் எவ்விதத்திலாகிலும் அவனை சாவான பாவத்தில் விழச்செய்யவும் வழி தேடும். ஆண்டவரையே அது சோதியாமல் விடாதபோது நம்மை விட்டுவிடுமோ? சூழ்ந்திருக்கும் ஆபத்துக்களினின்று நம்மைக்காத்து இரட்சிக்க காவலான சம்மனசுக்களை கடவுள் திட்டம் செய்திருக்கின்ற வண்ணம், அந்த ஆபத்துக்களினுல் நம்மைக் கெடுக்க லூசிபர் என்னும் தலையான பசாசும் தன் னதிகாரத்துக் குட்பட்ட பேய்க்கூட்டங்களுக்குக் கற்பித்திருக்கின்றது.

அர்ச். இராயப்பர் "உங்களுடைய சத்துருவாகிய பசாசு கர்ச்சிக்கிற சிங்கம்போல் யாரை விழுங்கலாமோ வென்று தேடிச் சுற்றித் திரி

இன்ற'' தென்று எச்சரிக்கைசெய்கிறார். யுத்தம் புரிவோருக்கு ஆயுதங்கள் இன்றியமையாதனவாகும். நம்முடைய சத்துராதியாகிய பேய் வீரனது ஆயுதங்களில் சிறந்ததும் முதன்மையானதும் எதுவென்றால், நம்முடைய பஞ்சேந்திரியங்களால் உண்டாகும் கெட்ட ஆசாபாசமாகும். பாவம் சாதாரணமாய்ப் பஞ்சேந்திரியங்களின் வழியாய்த்தான் நமக்குட் பிரவேசிக்கும். பாவத்துக்குக் கதவுகள்போ லிருக்கின்ற இந்தப் பஞ்சேந்திரியங்களை நாம் நன்றாகச் சாத்தாவிட்டால் பசாசு ஒரு கஷ்டமுமில்லாமல் உட்புகுந்து நம்முடைய இருதயத்தில் குடியேறி அரசாட்சி செய்யும்.

அர்ச். இயெரோணிமுஸ் சொல்லுமாப்போல் பஞ்சேந்திரியங்கள் இராஜ பாட்டைகளாகும். இந்தப் பாட்டைகளில் பேய்க்கூட்டங்கள் உல்லாசமாய்த் திரிந்து சவாரிசெய்து, சிறந்த மாளிகையாகிய ஆத்துமத்துக்கு முற்றிகைபோட்டு அதில் அரசுபுரியும். இஸ்பிரீத்துசாந்துவானவரை துரத்திவிட்டு பந்தோபஸ்தாய் சேகரித்து வைக்கப்பட்டிருந்த விலையேறப்பெற்ற ஞான ஆபரணங்களாகிய தேவ இஷ்டப் பிரசாதத்தையும், தேவ சிநேகத்தையும், நம்பிக்கையையும், விசுவாசத்தையும் கொள்ளையடிக்கும்.

பசாசின் இரண்டாவது ஆயுதம் உலகமாகும். உலகமாவது யாது? நம்மைச் சூழ்ந்திருக்கும் வஸ்துக்களும், முக்கியமாய்க் கெட்ட மனிதர்களுமாம். உலகத்திலிருக்கின்ற சகலமும் மனிதருக்காக உண்டாக்கப்பட்டனவென்று எல்லோரும் அறிவோம். இவைகளைக்கொண்டு கடவுளுக்கு ஊழியம் செய்யவும், அவரை நேசிக்கவும் வேண்டும். ஆனால் ஆத்தும இரட்சணியத்துக்கு உதவியாக உண்டாக்கப்பட்டவற்றையே, பசாசு இரட்சணியத்துக்கு இடையூறாக மாற்றிவிடுகின்றது. ஆத்துமத்தின் பரம ஒளழதத்தை கொடிய விஷமாக்கி, பேராசை, பெருமை, சலாக்கியம், அகங்காரம், கோபம், மோகமாகிய சோதனைகளை மனதில் எழுப்புகின்றது— விசேஷமாய் மனிதர்களுடைய துர்நடக்கையைக் கொண்டுதான் பசாசு ஆத்துமத்தைக் கெடுக்கின்றது. எத்தனையோ பேர் கெட்ட சகவாசத்தினாலும், அயோக்கியமான புஸ்தகங்களை வாசிப்பதினாலும், அசிசுயான நாடகங்களை பார்ப்பதினாலும் துர்ப்புத்தி கற்றுக்கொண்டு விசுவாசத்தையும் கற்பையும் பறிகொடுக்கிறார்கள். துர்ப்புத்தி கற்பிக்கிறவனைக் குறித்துதான் நமதாண்டவராகிய சேசுக்கிறிஸ்துநாதர் அவன் கழுத்தில் பெருங் கல்லைக் கட்டி சமுத்திர ஜலத்தில் அமிழ்த்திப் போடலாமென்று கூறினார்.

சரீரம் உலகமென்னும் இந்த ஆயுதங்களைக் கொண்டுதான் பசாசு நம்மை வென்று நரகத்தில் தள்ள வழிதேடுகின்றது—நண்பர்களே, பசாசை எதிர்த்து ஜெயமடைய நாமும் ஆயுதபாணிகளாயிருத்தல் அவசியமாகும்.

அர்ச். சின்னப்பர் ''நீங்கள் பசாசின் தந்திர சர்ப்பனைகளுக்கு எதிர்த்து நிற்க திராணியுள்ளவர்களாய் இருக்கும்படிக்குச் சர்வேசுரனுடைய போராயுதங்களை அணிந்துகொள்ளுங்கள். ஏனெனில் நமக்குள் போராட்டம்மாம்சத்தோடும் இரத்தத்தோடுமாத்திரமல்ல, துரைத்தனங்களோடும், வல்லமைகளோடும், இந்த அந்தகார லோகாதிபதிகளோடும், ஆகாச மண்டலங்களிலுள்ள அக்ரம அரூபிகளோடும் நாம் போராடவேண்டி யிருக்கின்றது. இதினிமித்தம் பொல்லாத நாளிலே அவைகளை எதிர்த்து நிற்கவும், எல்லாக் காரியங்களிலும் நீங்கள் உத்தமராய் நிலைநிற்கவும் திராணியுள்ளவர்களா யிருக்கும்படிக்குச் சர்வேசுரனுடைய போராயுதங்களை எடுத்துக்கொள்ளுங்கள்'' (எபேசி. VI, 12-13-14). என்று எல்லோரையும் எச்சரிக்கின்றார். இந்த போராயுதங்கள் அர்ச். சின்னப்பர் படிப்பினைப் பிரகாரமும், நம்முடைய ஆண்டவர் தமது போதனையாலும் சாதனையாலும் நமக்குப் படிப்பித்த பிரகாரமும் ஜெபமும் தபமுமே. இந்த ஆயுதங்களைக்கொண்டுதான் பசாசை யெதிர்த்து வெல்லவேண்டியது. பாவத்தை விலக்கவும், புண்ணியத்தைச் செய்யவும் நம்முடைய சொந்தப்பலன் போதாதென்றும் தேவ வரப்பிரசாதம் நமக்கு அத்தியாவசியமென்றும் நாமெல்லோரும் யறிந்த விஷயம். தேவவரப்பிரசாதத்தை யடைய வழியும் வகையும் ஜெபமும் தபமுமே யல்லவா? சோதனையில் பிரவேசியாதபடி விழித்திருங்களென்றும், ஜெபத்தினாலும், உபவாசத்தினாலுமே பசாசு துரத்தப்படுமே யொழிய மற்றப்படி யல்லவென்றும் ஆண்டவர் திருவுளம்பற்றியிருக்கிறார். பட்சிகளுக்குச் சிறகுகளிருந்தால்தான், சகல ஆபத்துகளுக்குந் தப்பி ஆகாயத்தில் பறந்துதிரியும். சிறகு இல்லாவிட்டால் தரையில் விழுந்து மற்ற உயிர்களுக்கு ஆகாரமாய்விடும். அவ்வண்ணமே நம்முடைய ஆத்துமாவாகிய பறவைக்கும் சிறகுகளிருந்தால்தான் சகலவித ஞான ஆபத்துக்களினின்றும் தப்பி மோட்சத்துக்குப் பறந்தோடும். இந்தச்

சிறகுகள் தான் ஜெபமும் தபமுமாகும். இவைக ளில்லாவிட்டால் நமதாத்துமம் உலக வாழ்க் கையிலேயே தனது நோக்கமெல்லாம் செலுத் தித் துஷ்ட மிருகமாகிய பசாசினுடைய அகன்ற வாயில் அகப்பட்டுக்கொள்ளும். நமதாண்டவரா கிய சேசுக்கிறீஸ்துநாதர் நாற்பது நாள் காலத் தையும்ஜெபத்திலும்தபத்திலும்கழித்தார். ஏன்? பசாசோடு போராட ஆண்டவருக்கு ஜெபமும்தப மும் தேவையாயிருந்ததோ? ஒருக்காலுமில்லை. பசாசை எதிர்த்துத் துரத்திவிட நாம் செய்ய வேண்டிய வழிவகைகளென்னவென்று நமக்குக் கற்பிக்கத்தான் நாற்பதுநாள் தனிவாசமாயிருக் கச் சித்தமானார்.

ஆண்டவர் ஜெபமும் தபமும்செய்ததுபோல் நாமும்செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். பசாசு நம்மை எப்போதும் பின் தொடர்ந்து வருவதி னால் ஜெபத்தை ஒருபொழுதும்கைவிடலாகாது. எந்நாளிலும் ஜெபத்தைச் செய்யக் கடமைப்பட் டவர்களாயிருந்தபோதிலும் விசேஷமாய் இவை களை யனுஷ்டிக்க குறிக்கப்பட்ட இந்தத் தபசு காலத்தில் அவைகளைச்செய்ய அதிக ஊக்கமுள் ளவர்களாய் இருக்கவேண்டியது. ஆண்டவர் நாற் பதுநாள் சுத்த உபவாசமாயிருந்தார். நீங்களு மிப்படியே உபவாசமாயிருக்கவேண்டியதென்று ஒருவரும் சொல்லுவதில்லை. திருச்சபையின் பொது சட்டத்தின்படி தபசுகாலத்தில் பிரதி தினமும், ஒருசந்தியாயிருக்க வேண்டியதென னும் சொல்லுவதில்லை. வாரத்தில் ஒருநாள்தான் ஒருசந்தியிருக்கவேண்டியதென்று திருச்சபை கற்பிக்கின்றது. ஆனால் எத்தனையோபேர் அற்ப காரணங்களை முன்னிட்டு ஒருசந்தி முறைமை யைத் தவறிப்போகிறார்கள். வாரத்தில் ஒருமுறை மாத்திரம் இரண்டு மூன்று பிடி சாதம் குறைத் தால் வியாதியில் விழுவீர்களோ? சாவுவருமோ? என்ன விபரீதம்! சொற்ப சம்பாதனைக்காகச் சரியானநேரத்தில் உண்ணுமலும் உறங்காமலும் ஊரெல்லாம் சுற்றியலைகிறோம். சரீரத்தின்மேல் நமக்குள்ள கவலையில் நூற்றில் ஒரு பங்காகிலும் ஆத்துமத்தின்மேல் நமக்குண்டோ? மேலும் இந் தத் தபசு காலத்தில் ஜெபமும் செய்யவேண்டி யது. தினந்தோறும் நாலைந்து நாழிகை ஜெபத் தில் செலவழிக்க வேண்டியதென்று நாம் உங்க ளுக்குச் சொல்லுகிறதில்லை. வழக்கமாய் பிரதி தினமும் நீங்கள் செய்யும் ஜெபங்களையே பத்தி யோடும் விசுவாசத்தோடும் சுறுசுறுப்போடும் செய்தால் போதும். கூடுமாபின் ... லாத நாட்களிலும் திவ்ய பூசைக்குப்போய் நற்கருணை உட்கொள்ளுங்கள். சிலுவைப் பாதைக்குச் செல்லுங்கள். ஞான புத்தகங்களை வாசியுங்கள்.

போர்புரிவதற்குமுன் ஆயுதங்களைச் சம்பா தித்துக்கொள்ளவேண்டியது. யுத்தம் செய்வ தில் ஆயுதங்களைத் தக்கவிதமாய் உபயோகிக்க வேண்டியது. பேயோடு போர்புரிவதில் ஆயு தங்களை எப்படி யுபயோகிக்கவேண்டியதென் ருல், நமதாண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதர் அதனோடு போராடினபோது உபயோகித்தது போல் நாமும் உபயோகிக்க வேண்டியது. ஆண் டவர் சோதனை வந்த உடனே எதிர் நியாயங்களை எடுத்துக்கூறி அதை மறுத்துவிட்டார்.

அவ்விதமாகவே சோதனையின் ஆரம்பத்தி லேயே "ஓ சாத்தானே, நீச மிருகமே, அப் பாலே போ, என் ஆண்டவருக்கு மாத்திரம் ஊழி யம் செய்வேன்" என்று சொல்லி அதைத் தள்ள வேண்டியது. பசாசுக்குச் சிறிது இடம் கொடுத் தால் காரியங் கெட்டுப்போம், விஷம் தலைக்கேறி விடும். உங்கள் பிராண சத்துருக்களோடு விளை யாடுவீர்களா? நயவஞ்சகமாய்ப் பேசிச் சிரித்துக் கொண்டே நீங்கள் கொஞ்சம் அஜாக்கிரதையா யிருப்பீர்களேயாகில், அவர்கள் உங்கள் கழுத்தை முறித்து கொன்றுபோடுவார்கள். பசாசு ஆதித் தாய் தகப்பனை கெடுத்த நரக சர்ப்பமென்று அறியக்கடவீர்கள். இது என்ன பிரமாதம்! சொற்பப் பாவந்தானே; என்னமோசம் வந்திடு மென்று நியாயமெடுத்துப் பேசுவீர்களா, விளை யாட்டாகத் துவக்கினது வினையாய் முடியும். சொற்பப் பாவத்தால் சாவான பாவத்துக்கு வழி ஏற்படும். அர்ச். சவேரியார் பசாசு முந்த முந்த ஒரு நூலினாலும், பிறகு ஒரு கயிற்றினாலும், கடைசியில் இருப்புச் சங்கிலியாலும் ஆத்துமங் களைக் கட்டித் தன் அடிமைகளாக்கிக் கொள்ளு கிறதென்கிறார். பாவம் நெருப்புக் கொப்பாகும். நெருப்பை யாரம்பத்திலேயே அவிக்காவிட்டால் எல்லாப்பக்கமும் பரவும். ஆரம்பத்தில் அவிக் கிறது எளிதாகும். அஜாக்கிரதையாய் விட்டுவிட் டால் பிறகு அவிப்பது அசாத்தியம். பாவச்சோ தனைகளும் இப்படியே. ஆரம்பத்தில் பசாசை எதிர்க்க எளிதாகும். ஆனால் பசாசுக்குச் சிறிது இடம்தருவீர்களேயாகில் அந்த விடத்தை க்ஷணப் பொழுதில் விஸ்தாரமாக்கிக் கொள்ளும். பிறகு அந்த விடத்திலிருந்து பசாசைத் துரத்த உங்க ளால் முடியாது.

நீங்கள் உடுத்தியிருக்கும் வஸ்திரத்தில் நெருப்புப் பற்றிக்கொண்டால் "என்ன பிரமாதம், நெருப்பு நுனியில்தானே பற்றிக்கொண்டது, இன்னும் இடுப்புக் கேறவில்லையே" என்று சப்பணம் போட்டுக்கொண்டு உல்லாசமாய் உட்கார்ந்திருப்பீர்களோ? நெருப்புக்குச்சிதானே யென்று அதைக் கிழித்துக் கூரைவீட்டின்மேல் எறிந்து விடுவீர்களோ? ஆதலால் பசாசை ஆரம்பத்திலேயே எதிர்க்கவேண்டியது. ஆதித்தாய் சிங்காரவனத்தில் துவக்கத்திலேயே "சாத்தானே அப்பாலே போ" என்று எதிர்த்திருந்தால் விலக்கப்பட்ட கனியைப் புசித்திருப்பாளோ? பசாசு நயவஞ்சகமாய்ப் பேசிக்கொண்டே தான் எண்ணிய காரியத்தை முடித்துவிட்டது. யூதாஸ் பொருளாசையினாலல்லவோ ஆண்டவரை விற்கவந்தான். முதல் முதல் இவன் தர்மத்துக்காகக் கொடுத்த பணத்தில் கொஞ்சம் கொஞ்சமாய்த் திருட ஆரம்பித்தான். முடிவில் பணப்பேய் பிடித்தவனாய் முப்பது வெள்ளிக் காசுக்குக் கடவுளையே விற்கத்துணிந்தான். ஆரம்பத்திலேயே அந்தத் துற்குணத்தை வேரோடு பிடுங்கி எறிந்து விட்டிருந்தால், மற்ற அப்போஸ்தலர்களுடைய பாக்கியமான நிலைமையையடைந்திருப்பான்.

பசாசு சேசுநாதரைக் கெடுக்கமுடியாதென்றறிந்து அவரை விட்டகன்று போயிற்று. உடனே தேவதூதர்கள் அணுகிப் பணிவிடை செய்தார்கள்.

நண்பர்களே, ஆரம்பத்திலேயே ஆண்டவரைப்போல் சோதனையை மறுத்தால் பசாசு வெட்கத்தோடு ஓட்டம்பிடிக்கும். மறுபடியும் பயந்து உங்கள் அருகில்வர அஞ்சும். தேவதூதர்கள் உங்களுக்குப் பணிவிடை செய்வார்கள், அதாவது உங்களைத் தேற்றி மனங்குளிரப் பண்ணுவார்கள்.

L. S.

நீ வேறு சொரூபனாகிய பரமானந்த பரப்பொருளின் தூய வெளிச்சத்தில் தோய்ந்து பேரின்ப செல்வக்கடலில் அமிழ்ந்தவேணுமானால், நீ வாசம்பண்ணும் நாற்றத்தோற் றுருத்தியாகிய சரீரமிடைந்துபோகவும் ஊத்தைப் பாண்டமாகிய இந்தத் தேக முடைந்துபோகையில் மெஞ்ஞான தீபமாகிய தெய்வத்தைப் பார்க்கவும் ஆவல்கொண்டிருப்பாயாக.

—(அர்ச். சிலுவை அருளப்பர்.)

CORRESPONDENCE.
கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர் ப—ர்.]

ஆரம்பாக்கம்
லூர்துநாயகி தரிசனையின்
வஜ்ர மஹோற்சவ கொண்டாட்டம்.

ஆரம்பாக்கத்தில் லூர்துநாயகி தரிசனையின் 60-ம் வருஷ ஜூபிலி கொண்டாட்டம் நவநாட் ஜெபத்துடன் மிக்க ஆரவாரச்சிறப்பாய் நடந்தேறிற்று. இக்கோவில் விசாரணை குருவானவராகிய சங்கை. S. M. F. இன்னய்யநாத சுவாமியாரோடு, சென்னையிலிருந்து வந்த சங்கை. பெர்நாந்தேஸ் (Rev. Fr. Fernandes) சுவாமியாரும், குண்ட்டூரிலிருந்துவந்த சங்கை. G. ராட்கர் (Rev. Fr. Raatger) சுவாமியாரும்மெத்த உதவியாயிருந்து திருநாள் நடத்தினார்கள். பெர்நாந்தேஸ் சுவாமியார் வெஸ்பெர்ஸ்முடிவில் இங்கிலீஷிலும், பெரியதேர் சுற்றுப்பிரகார முடிவில் வெளி மைதானத்தில் தமிழிலும், பெரிய பாடல் பூசை முடிவில் இங்கிலீஷிலும், தமிழிலும் எல்லோருடைய மனமகிழ அதி அவசியமும், பிரயோசனமுமான நற்போதனை அனுசரணைகளை மிக்க நேர்த்தியாயும் தெளிவாயும் வற்புறுத்தி பிரசங்கம்செய்தார். ராட்கர் சுவாமியார் பெரிய பாடல் பூசைக்கும், தேர் சுற்றுப்பிரகாரங்களுக்கும் உதவி புரிந்தார். கோவில் மேஸ்திரி கன்னியா பிள்ளை திருநாள் சிறப்புக்கான காரியங்களை நடத்த அதிக அக்கரையும் கவலையு மெடுத்துக்கொண்டுழைத்தார்.

சென்னை முதலிய பல விடங்களிலிருந்து இருநூர்(200)பேர்வரையில் கிறீஸ்துவர்கள் திருயாத்திரையாய் வந்திருந்தார்கள். இவர்கள் புதிதாய் கட்டப்பட்டிருக்கும் கோவில் சத்திரத்தில் தங்கியிருந்தார்கள். இத்திருநாள் தருணத்தில் பரலோக திவ்ய அப்பத்தியின் பந்தியில் அமர்ந்தவர்கள் 200-பேர் இருக்கும். 24 பேருள்ள மதராஸ் ரயில்வே முழு பாண்டுவாத்தியம் வந்து சேவித்தது இந்த ஜூபிலியை மிக்க காம்பீரியப்படுத்தினது. ரோஷாநகரத்து தஞ்சாவூர் வாத்தியமும் இவ்விடத்திய பலவகை மேள வாத்தியங்களும் நவநாள் முடிவுவரையிலும் நன்றாய்ச் சேவித்தன. தேர் பிரதட்சணை பார்க்கவந்து வெளி

மைதான பிரசங்கத்தை ஆசை கவனத்தோடு கேட்க நின்ற இந்து ஜனங்கள் 2 ஆயிரம் பேரிருக்கும். கோவிலில் பாடுவதற்கு D'Cruz துரையும் அவருடைய பாட்டுக்காரரும் சென்னையிலிருந்து வந்திருந்தார்கள். சென்னை மகா-ா-ா-ஸ்ரீ T. M. மாணிக்கம் பிள்ளை யவர்களின் நேர்த்தியான முத்துமாலை ஜோடினைத் தேரும், பில்வின் என்பவரின் வர்ணத் தேரும், லூர்து நாயகியினுடையவும், அர்ச். சூசையப்பருடையவும் சுரூப ஸ்தாபகத்துடன் சுற்றுப்பிரகாரத்தில் எழுந்தருள்படியாய் வந்தது. பாணம், புருசு, வெடில்களின் காட்சியும், தீவட்டி மத்தாபுகளின் பிரகாசமும் சுற்றுப்பிரகாரத்தைச் சிறப்பித்தது. Traffic Inspector ஆகிய Ball துரை மிக்க தயையுடன் புகைவண்டிகளில் திருயாத்திரைக்காரரின் இடவசதியைக் கவனித்து உதவிசெய்தார். போலீசுக்காரரும் நல்ல பந்தோபஸ்து செய்தார்கள்.

குறிப்பு.—மதராவிலிருந்து ஆரம்பாக்கத்துக்கு வரவும் போகவும் புகைவண்டிகளின் நேரம் சரியான சமயமா யிராததாலும், வண்டிகளில் இடம் போதாமையாலும் இவ்விடத்துக்கு திருவிழாகாலங்களில் வரும் பிரயாணிகள், திருயாத்திரைக்காரர், சந்தரிசனைக்காரர், மெத்த வருத்தப்படலாகிறது. இதனை நிவர்த்திசெய்ய ரயில்வே மேலதிகாரிகள் கவனிக்கும்படியாய் விரும்புகிறோம். அப்போது இன்னும் திருயாத்திரைக்கார்ர் அதிகரிக்கவும், வசதியாய் யாத்திரை செய்யவும்கூடும். ரயில்வே கம்பெனிக்கும் அதிக ஆதாயமாயுமிருக்கும். இதற்காக இப்போதிய ஐரோப்பிய யுத்தம் முடிந்தபின் திருவிழா தருணங்களில் இவ்விடத்துக்கு விசேஷ (Special) ரயில் வண்டிகள் விடும்படி முயற்சிசெய்ய அவாவுடன் அதிகாரிகளைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஆரம்பாக்கம்,
21—2—18.

இப்படிக்கு,
கண்கண்ட சாக்ஷி

புன்னைக்காயல்

திரு இருதயத்தின் விசேஷ அநுக்கிரகம்

அகண்ட இவ்வுலகத்தையும், மற்ற சராசரப் பொருட்களையும், ஆக்கல், அழித்தல், காத்தல், என முத்தொழிலையுமுடைய சர்வேசுரன் ஆதியில் நம் ஆதித்தாய் தந்தையரை யுண்டாக்கினதையும், அவர்கள் விலக்கப்பட்ட கனியைத் தின்றதினல் உலகம்பாவத்தால் அந்தகாரப்பட்டு அவர்களுக்கும் அவர்கள் சந்ததியாராகிய நமக்கும் வியாதி வருத்தம் சாவு முதலியவை யேற்பட்டதையும், மனுக்குலத்தின்மேல் கிருபை யுடைத்தான சர்வேசுரன் நமக்காகப் பாடுபட்டு பாவ அந்தகாரத்தினின்று நம்மை மீட்டுக்கொண்டதையும், பரிசுத்த திருச்சபையின் போதனையாலும், வேதபுத்தகத்தினுலும், பாரம்பரியத்தினுலும் நாம் அறிந்திருக்கிறோமல்லவா? இஃதிவ்வாறிருக்க, 1917-ம் வூ டிசம்பர்மீ 20-ந் வ. எனது அருமை மணவாளரும் "நல்லாயன்" சந்தாதாரர்களில் ஒருவருமாகிய A. J. S. T. பர்னந்து அவர்கள் புன்னைக்காயலில் விஷபேதியால் பீடிக்கப்பட்டு, எவ்வளவோ ஒளஷதங்கள் கொடுத்தும் நிர்ப்பிரயோசனமாகி சகலராலும் கைவிடப்பட்டு கடைசி தேவத்திரவிய அனுமானங்களைக் குறைவின்றி நிறையப்பெற்று, சுமார் எழு நாட்களாக அவரது தாயும், தனையையும், துணைவியும் ஓர் ஆதாரமுமின்றி திக்கு முக்காடித் திகைக்கும் வேளையில், கிருபையுடைத்தான சேசுவின் திரு இருதயத்தைப் பார்த்து, "ஆதியில் மனுக்குலத்தை பாவ அந்தகாரத்திலிருந்து மீட்ட திருஇருதயமே! இந்த ஆபத்தான வேளையில் காப்பாற்றிக்கொடு"மென்று கேட்க எனக்குப் பக்க பலமாக அர்ச். பொம்பேயி மாதாவையும் அர்ச். தோமையாரையும் சேர்த்துக்கொண்டு, இப்பரிசுத்தர்கள் இருவரையும் முன்னுகவும், ஏழையாகிய யான் பின்னுகவும் நின்று, இரக்கத்தையே இயற்கையாகக்கொண்ட அத்திரு இருதயத்தைப் பார்த்து சாஷ்டாங்க தெண்டனிட்டு வேண்டிக்கொள்ள, நல்ல சுகம் கிடைத்தது. அத்திரு இருதயத்துக்கு என்றும் மாருத தோத்திரமுண்டாகக்கடவது.

மாணிக்கம்மா ரோச்சி.

மூர்க்கையூர்.

இராமநாதபுரம் ஜில்லா, மூர்க்கையூர் கிராமவாசியான பரதகுலக் கிறீஸ்துவர்களை சேசுவின் திரு இருதயத்துக்கு சமர்ப்பிக்கும் நன்றியறிதலான ஸ்தோத்திரம்.

ஷை யூரில் 10-12-1917 ல் கால்ராவென்ற கொடிய வியாதி ஆரம்பித்து ஒன்றரைமாத காலமாய் வாதித்து. இந்தச் சிறிய கிராமத்தில் ஏறக்குறைய நூறு ஜனங்களுக் கதிகமானேரைத் தனக்கு இரையாக்கிக்கொண்டது. மரணித்தவர்களில் அநேகர் சேசுவின் திரு இருதயத் தலை வெள்ளிப் பக்தியில் சேர்ந்திருந்து, நல்ல ஆயத்

தத்துடன் கடைசித்தேவத்திரவிய அனுமானங்களனைத்தையும் குறையறப்பெற்றுப் பாக்கியமான மரணத்தை யடைந்தார்கள். அக்கொடிய வியாதி கண்டவர்களில் அநேகர் உடனே சேசுவின் திரு இருதயத்தின் பேரில் மெய்யான நம்பிக்கை வைத்து திவ்ய நற்கருணையிலிருக்கிற சற்பிரசாத ஆண்டவரை உட்கொண்டபோது அவர்களிரந்து கெஞ்சி கேட்டுக்கொண்ட தாழ்மையான விண்ணப்பங்கள் கேட்கப்பட்டு, வெகு அற்புதமாகக் காப்பாற்றப்பட்டார்கள். எங்கள் ஊர் பாதுகாவலராகிய அர்ச். யாகப்பருக்கும் மிக்க நன்றியறிதலான ஸ்தோத்திரம் புரிகிறோம். இக்கொடிய வியாதியின் ஆரம்பத்திலிருந்து கடைசி பரியந்தம் எங்கள் பங்கு விசாரணை சங்கைக்குரிய இராஜரிஷி குரு. D. சுவாமிநாத குருஸ்வாமியவர்கள் ஆத்தும விஷயத்திலும் சரீர விஷயத்திலும் இரவு பகல் நித்திரையின்றி எடுத்துக்கொண்ட அரிய பெரிய கஷ்டங்களுக்கு நாங்கள் எவ்வாறு அம்மகானுக்கு பிரதி நன்றிசெய்யப் போகிறோமென அறியாமல் மெய்யாகவே தத்தளித்து நிற்கிறோம். அம்மகானைத் திரியேக சர்வேஸ்பரன் இன்னம் நீடூழிகாலம் தமது மந்தையில் உழைத்துவரக் கிருபை செய்யும்படி அவரைப் பிரார்த்தித்து நிற்கும்,

உண்மையுள்ள

1—2—1918. பரததுலக் கிறீஸ்துவர்கள்.

MISCELLANEOUS NEWS & NOTES.
பற்பல சமாச்சாரம்.

ஒரு பெரும் படை.—தற்போது அமெரிக்காவில் 12 லட்சத்து 50 ஆயிரம்போர் வீரர் யுத்தத்துக்குத் தயாராயிருக்கிறார்கள். வருகிற ஜூன் மாதத்தில் 90 லட்சம் பேர் யுத்தக்களத்துக்குச் செல்லுவார்களாம்.

ஓர் வேடிகுண்டு.—ஜெர்மன் சக்கரவர்த்தி வசிக்கும் அரண்மனையின்மேல் வெடிகுண்டு ஒன்று விழுந்து வெடித்ததாக தந்தி சமாச்சாரம் எட்டியிருக்கிறது.

உலகத்திலுள்ள இருப்புப் பாதைகளின் நீளம் எவ்வளவு?— அவைகள் நான்குலட்சம் மைல் நீளமுள்ளனவென்று கணக்கெடுத்திருக்கிறார்கள். இருப்புப் பாதைகளுண்டாகி இப்போது எண்பது வருஷந்தானாகிறது.

ஓர் நூதன புஷ்பச் செடி.—டியு அந்திபேஎன்னும் பூச்சந்தியில் ஒருவிதச் செடி காலையில் வெண்மையான புஷ்பங்களையும், மத்தியானத்தில் சிகப்பானவையும், மாலையில் நீலமானவையும் பூர்க்கிறதாம். மத்தியானத்தில் பூர்க்கிற புஷ்பங்களே மணமுள்ளவையாம்.

ஒரு அதிர்ஷ்ட சாலி.—ஏழைச் செம்படவனாகிய ஐரிஷ்காரன் ஒருவன் தன் வலையை கடலில் விசிறினபோது, அதில் அநேக மீன்களும் 50,000 ரூ. பெறுமான வைரக்கற்க ளடங்கிய சிறிய மூட்டையொன்றும் அகப்பட்டன. சில மாதங்களுக்குமுன் நீர்மூழ்கி கப்பலினால் தாக்கப்பட்டு உடைபட்ட "லூசித்தானு" கப்பலிலிருந்து இவ்வைரக்கற்கள் வெளிப்பட்டிருக்கவேண்டியதென்று யூகிக்கப்படுகிறது.

ஒரு கோவிலை பெயர்த்து வைத்தல்.—அமெரிக்காவிலுள்ள சிக்காகோ பட்டணத்தில் அர்ச். ஐந்துகாய பிரான்சீஸ்கு கோவில் ஒன்று உண்டு. அக்கோவிலிருக்கும் ரஸ்தா அகலமாக்கப்பட வேண்டியிருப்பதால், கோவிலைப் பெயர்த்து இன்னொரு இடத்திற்குக் கொண்டுபோய் வைக்க ஏற்பாடு செய்து வருகிறார்கள். அந்தக் கோவிலின் கோபுரமாத்திரம் 180 அடி உயரமும் 1,800 டன் நிறையுமுள்ளது. இப்பெரிய கட்டிடம் 700 உருளைகளைக்கொண்டு இழுக்கப்படுமாம்.

கிறீஸ்துநாதரை மறுதலிக்கும் ஓர் பிஷப்பு.—இங்கிலாண்டு தேசத்தில் என்சன் என்னும் ஒரு புரோடஸ்டாண்டு பாதிரியார் நமதாண்டவரான சேசுநாத சுவாமிக்குத் தேவசுபாவ மில்லையென்று பல தடவைகளில் தம்முடைய சபையாருக்குப் பிரசங்கித்து வந்தார். இவர் தற்போது பிஷப்பாகிவிட்டார். இனி இவருடைய வேதக்கொள்கை எப்பேர்ப்பட்டதாகுமோ! ஆனால் இவருடைய சபையாரும், பாதிரிமார்களும் இவருக்குப் பிஷப்பு பட்டம் தகாதென்றுசொல்லி முறையிட்டுக்கொள்ளுகிறார்களாம்.

நகத்தினால் சித்திரம் வரைதல்.—பூர்வம் சீனரும் ஜப்பானியரும் நகத்தினால் சித்திரமெழுதுவதுண்டு. இதற்காக அவர்கள் தங்கள் பெருவிரல் நகத்தை ஒன்றரை அடி நீளம் வளரவிட்டுப் பிறகு

அதைக் கூர்மையாகச் சீவி அதைக் கொண்டு வர்ணத்தைத்தொட்டு படங்கள் எழுதிவந்தார்களாம்.

இதில் ஸ்திரீகளின் கால்படக்கூடாது.–மூன்று வருஷங்களுக்கு முந்தி அதாவது இந்த யுத்தம் தொடங்கினபோது பெல்ஜியத்திலுள்ள ஒரு சன்னியாசமடத்துக் கருகாமையில் நடந்த சண்டை ஒன்றில் மடிந்த ஆங்கிலேய போர்ச்சேவகர்கள் ஷே மடத்தின் சிரேஷ்டருடைய அநுமதியின் பேரில் அம்மடத்துத்தோட்டத்தில் அடக்கஞ் செய்யப்பட்டிருக்கிறார்கள். அச்சமயத்தில் "எந்த ஸ்திரீயும் அந்தத் தோட்டத்தில் பிரவேசிக்கப்படாது" என்று செய்த ஒப்பந்தத்தின்படி அதிலுள்ள கல்லறையொன்றைச் சமீபத்தில் சந்திக்க வந்த ஒரு சீமாட்டி (Duchess) அதில் பிரவேசிக்கப் போனபோது காவல் சேவகனால் தடுக்கப்பட்டாள். இதைப்பற்றி அச்சீமாட்டி அரசரிடத்தில் முறையிட்டுக் கொண்டபோது, மடத்துச் சிரேஷ்டருடன் இராணுவத்தார் செய்துகொண்ட ஒப்பந்தத்தை மீறலாகாதென்று தீர்ப்புச் சொல்லப்பட்டது.

கொள்ளையாடுதல்–நிகழும் போரைத் தங்களுக்கொரு சாக்காக வைத்துக் கொண்டு வியாபாரிகள் துணிமணி, உணவு பொருள்கள், எண்ணெய், விறகு முதலியவைகளுடைய விலையை அநியாயமாய் ஏற்றி விற்பனை செய்து வருகிறபடியால், கல்கத்தா, பம்பாயி முதலிய பட்டணங்களிலும், வேறு சிறு ஊர்களிலுமிருந்த ஏழை ஜனங்கள் பலசரக்கு கடைகளின் மேலும், சில்லறைக் கடைகளின் மேலும் இன்னும் பெரிய ஷாப்புகளின் மேலும் கூட்டங் கூட்டமாய்ப் போய் விழுந்து கொள்ளையாடினார்களாம். சென்னை துரைத்தனத்தார் அகவிலைகளை விசாரித்து நியாயப்படி விற்பனைசெய்ய ஏற்பாடுசெய்யப்போகிறதாகத் தெரியவருகிறது

மகாபெரிய வைரக்கல்—போர்த்துக்கல் தேசத்து அரசரிடத்திலுள்ள வைரக்கல்லே மகா பெரிய வைரக்கல்லென்று சொல்லப்படுகிறது. இதன் இடை ஏறக்குறைய ஒரு பவுண்டு, பிரமாணம் ஒரு கோழிமுட்டை அளவு. இது அமெரிக்காவிலுள்ள பிரசீல் நாட்டில் கிடைத்ததென்றும், விலை 60 லட்சம்ரூபாயென்றுந் தெரியவருகிறது.

ஓர் அநியாய ஒப்பந்தம்—நடைபெறும் யுத்தத்தில் இத்தாலியா தேசத்தார் தலையிட்டுக் கொள்வதற்கு முந்தி பிரிட்டிஷ், பிராஞ்சிய, ருஷ்ய அரசாக்ஷிகளுடன் கலந்து பேசி, யுத்த விஷயமாயாவது, சமாதான விஷயமாயாவது பாப்பானவர் யாதோர் முயற்சி செய்வாரானால், அதற்குத் தாங்கள் சம்மதிக்கக் கூடாதென ஒப்பந்தஞ் செய்துகொண்டதாக சமீபத்தில் ருஷியர் மூலமாய்த் தெரியவந்தது. என்ன அநியாயம் இது! சமாதான இராயராகிய சேசுக்கிறீஸ்துநாதரின் பிரதிநிதியாராகிய பரிசுத்த பாப்பானவருடைய சமாதான சொல்லுக்குக் காதை பொத்திக்கொண்டால் உலகத்தின் கதியென்னவாகும்!!

ஓர் சமாச்சாரம்.—இந்த யுத்தந் தொடங்கின காலத்தில் ஸ்பேயின் தேசத்தரசர் அர்ச். பாப்பானவருக்குக் கடிதமெழுதி யுத்த முடியுமட்டும் தம்முடைய தேசத்தில் அவர் வந்திருக்கும்படி கேட்டுக்கொண்டார். ஆனால் பரிசுத்த தந்தை 15-ம் ஆசீர்வாதப்பர் அதற்குச் சம்மதித்தவரல்லர். தற்போது ஜெர்மனியர் இத்தாலியாவின்மேல் படையெடுத்து வெனிஸ் நகரம் வரையிலும் வந்திருக்கிறார்கள். இவர்கள் ஜெயங்கொண்டு முன்னேறுவார்களானால் அர்ச். பாப்பானவர் ரோமைமா நகரை விட்டு வேறொரு தேசத்தில் அடைக்கலம் புகவேண்டியதாய் வருமென்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். சிலரோ அவர் அப்படி ரோமையை விட்டு வெளியேறாரென்கிறார்கள்.

ஓர் பெருத்த அக்கிரமம்.—நிகழும் கொடிய யுத்தத்தினால் பல தேசங்கள் தங்கள் குடிகளுடன் பாழாய்ப் போயினவென்று சொல்லத் தேவையில்லை. இப்படிப் பாழாய்ப் போனவைகளில் அர்மேனியா தேசமே மிக்கப் பிரலாபத்துக்குரியதாகும் வீடுகளும் கோவில்களும் பாடசாலைகளும் நிர்மூலமாக்கப்பட்டன. எட்டு லட்ச ஜனங்கள் பலவாறு உபாதிக்கப்பட்டுக் கொலைசெய்யப்பட்டார்கள். சிறுவர் சிறுமிகளும் ஸ்திரீகளும் நடத்தப்பட்ட விதம், ஐயோ, நாவால் உரைக்குந் தன்மை

யல்ல!! இவ்வளவு நிஷ்டூரத்துக்குரிய செய்கைகளை யெல்லாஞ் செய்தவர்கள் நுனுக்கரே!

மதுரையில் இரு இந்து வாலிபர்கள். இவர்கள் கத்தோலிக்கு வேதமே உண்மையான வேதமென் றுணர்ந்து அதில் உட்பட்டார்கள். இதை அறியவந்த அவ்விடத்திய அம்மையார் அனிபிசான்டின் கட்சியார் பல விடங்களில் கூட்டங்கூடி இது முதல் யாரும் தங்களுக்குள் கிறீஸ்துவேதத்திலுட்படாதபடிச்செய்ய சகல பிரயாசையுப் முயற்சியு மெடுத்துக்கொள்ள வேண்டுமென்று தீர்மானித்து விட்டார்களாம்!! இந்தத் தீர்மானத்தின் பலனுக இனிமேல்யாரும் கத்தோலிக்குக்கிறீஸ்துவர்களாகார் போலும்!

ஓர் தைரியசாலி—சிறிதுகாலத்துக்கு முந்தி ஜெர்மனியர் பிரான்சு தேசத்தின் ஒருபாகத்தைத் தாக்கியபோது, ஒரு கோவில் நெருப்புப்பிடித்து எரிந்து கொண்டிருந்தது. கோவிலுக் கருகாமையில் கண்ணீர் சொரிந்து அழுதுகொண்டு நின்ற ஒரு வயோதிப குருவானவரை ஐரிஷ் போர்ச்சேவகன் ஒருவன் அணுகி "சுவாமீ, தேவநற்கருணைப் பாத்திரத்தை யெடுத்துப் பத்திரப்படுத்தினீர்களோ?" என்று கேட்க அதற்கவர்" தம்பீ, தேவநற்கருணைப் பெட்டியின் சாவி எப்படிப் போயிற்றென்று தெரியவில்லை. ஆனபடியால் தேவநற்கருணைப் பாத்திரத்தை யெடுக்க என்னுலாகவில்லை" யென்முர். உடனே போர்வீரன் ஆபத்தொன்றுக்கும் அஞ்சாமல் கோவிலுக்குள் நுழைந்து, அங்குமிங்குந் தேடிப் பார்த்து சாவியைக் கண்டெடுத்துப் பெட்டியைத் திறந்து நற்கருணைப் பாத்திரத்தைப் பூச்சியமாயெடுத்துக் கொண்டுவந்து குருவானவர் கையில் கொடுத்தான். என்னே, இந்தச் சேவகனுடைய விசுவாசமும் தைரியமும்!

பெல்ஜிய பிள்ளைகளின் கதி.—ஜெர்மனியர் பெல்ஜிய ஸ்திரீகளைக் கடின வேலைசெய்யக் கட்டாயப்படுத்தி வருவது போல் 12, 13, பிராயமுள்ள சிறுவர்களையும் இப்போது சுரங்கங்களிலும் அரண் குழிகளிலும் கஷ்டவேலை செய்யக் கட்டாயப்படுத்தி வருகிருர்கள். ஞாயிற்றுக்கிழமைகளில் மாத்திரம் சிறிதுநேரம் இளைப்பாற இவர்களுக்கு உத்தரவு உண்டு. இப்படியாக வேலைசெய்யும் சிறுவர்கள் அநேகர் குண்டுகளுக் கிரையாகி வருகிருர்கள்.

ஜெருசலேம்—இத் திருபட்டணம் சில மாதங்களுக்கு முந்தி பிடிபட்டபோது ரோமாபுரியிலிருக்கும் நமது சக்கரவர்த்தியின் ஸ்தானபதி அர்ச். பாப்பானவருடைய தரிசனமடைந்து, இப்பட்டணம் யாதொரு சேதமும் படாமலே ஆங்கிலேயர் வசமானதைப் பற்றியும், அதைக் கைப்பற்றிய ஆங்கிலேய ஜெனரல் அவ்விடத்திலுள்ள அர்ச். பிராஞ்சீஸ்குசபை சிரேஷ்டரோடும், கிரீக் பிதாப்பிதாவோடும் பட்டணத்தின் க்ஷேமத்துக்காக கலந்து பேசினதைப்பற்றியும் பாப்பானவருக்கு அறிவித்தார். மெய்யாகவே கிறீஸ்துவர்கள் எல்லோருக்கும் இதோர் சந்தோஷகரமான செய்தியென சொல்லத்தேவையில்லை.

இத்தாலியாவில் ஜனங்கள்படும் சங்கடம்.—ஜெர்மனியரால் இத்தேசத்தில் ஆக்கிரகித்துக் கொள்ளப்பட்ட விடங்களிலிருந்த ஜனங்கள் தங்கள் வீட்டையும் வாசலையும்விட்டு உரோமாபுரி முதலிய பெரிய நகரங்களுக்கோடிப்போய் அடைக்கலம் புகுகிருர்கள். அந்நகரவாசிகளும் தங்களுக்குள் தர்மம் தண்டல்செய்து இந் நிர்ப்பாக்கிய ஜனங்களை ஆதரித்து வருகிருர்கள், காலஞ்சென்ற பரிசுத்த பிதா 10-ம் பத்திநாதரின் பந்துக்களும் இப்படி உரோமாபுரிக்கு ஓடிவர, அவ்விடத்திலிருக்கும் அவருடைய சகோதரிகள் இவர்களுக்கு நல்வரவு கூறி, ஆதரித்து வருகிருர்கள். இவர்கள் தங்கள் ஊரைவிட்டுப் புறப்படுகையில் அவ்வூர் மேயர் (அதிகாரி) இடஞ்சென்று 10-ம் பத்திநாதர் பிறந்து வளர்ந்த வீட்டைப் பத்திரமாய்ப் பார்த்துக்கொள்ள கேட்டுக்கொண்டார்கள்.

பிரமாண்டமான கட்டிடங்கள்.—அமெரிக்காவிலுள்ள நியூயார்க்நகரில் 34 அடுக்குள்ள மெத்தை வீடு ஒன்றுண்டு. இதன் உயரம் 424 அடி, அதாவது சென்னை தீபஸ்தம்பத்தை விட ஏறக்குறைய மும்மடங்கு உயரமாயிருக்கின்றது. ஜெர்மனியில் அல்ம் என்னும் பட்டணத்தில் ஒரு கோபுரங்கட்டி முடிக்க 500 வருஷம் பிடித்ததென்றும், அதன் ஒவ்வொரு

அடியையும் கட்ட ஒரு வருஷம் பிடித்ததென்றும் சொல்லப்படுகிறது. ஆயினும் அது 258 அடி மாத்திரம் உயரமுள்ளது.

திண்டிவனக் கைத்தொழிற் சாலை.—திண்டிவனத்தில், அர்ச். கபிரியேல் சபை சந்நியாசிகள் மடமொன்று இருக்கிறதென்றும், இச்சந்நியாசிகளால் வெகு பிரயோசனகரமாய் நடத்தப்பட்டுவரும் அர்ச். சூசையப்பர் கைத்தொழிற் சாலை ஒன்று இருக்கிறதென்றும் நமது நண்பர்களில் அநேகருக்குத் தெரிந்திருக்கலாம். இப்போது இந்தக் கைத்தொழிற்சாலை சிறுவர்களுக்குத் தச்சுவேலை பயிற்றுவிக்கும் பகிரங்க பாடசாலையாக கவர்ன்மென்டாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதென்று கேள்வியுற்று சந்தோஷிக்கிறோம். இதன் விஷயத்தில் ஏற்படும் செலவை கவர்ன்மென்டாரே ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். கைத்தொழில்போதனபிவிருத்தி விஷயத்தில் கவர்ன்மென்டார் ஏற்படுத்த விருக்கிற பள்ளிக்கூடங்களில் இதுவே முதலானதாகும். இவ்வாறு முதல் முதல் நமது கத்தோலிக்குப் பள்ளிக்கூடத்தை கவர்ன்மென்டார் தெரிந்துகொண்டது கத்தோலிக்கருக்குச் சந்தோஷத்தைத் தரத்தக்க விஷயம். இப்பள்ளிக்கூடமும் அதை நடத்திக் கண்காணித்துவரும் சந்நியாச சபையும் மேலும் மேலும் விருத்தியாகி அனைவோருக்கும் அதிக பிரயோசனத்தை அளிக்கும்படி சர்வேசுரன் அருள்புரிவாராக. இந்தச் சந்நியாசமடம் இந்திய வாலிபர்களுக்காக ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. தற்போது இதிலுள்ள சந்நியாசிமார் 16பேர். இவர்கள் ஷை தொழிற்சாலையில் சிறுவர்களுக்கு கைத்தொழிற் கற்பிப்பதிலும், பாடசாலைகளில் கல்வி பயிற்றுவதிலும் அலுவலாயிருக்கிறார்கள். இவர்களால் திண்டிவனத்திலும் ஏர்க்காட்டிலும் நடத்தப்பட்டு வரும் எலிமென்டரி பாடசாலைகள் மிக்கப் பிரக்யாதிபெற்று விளங்குகின்றன.

மெசோபொட்டேமியாவில் நமது கத்தோலிக்கர்கள்.—இப்போது நடைபெற்று வரும் கொடிய ஐரோப்பிய யுத்தத்தில் நமது காருண்ய கவர்ன்மென்டாருக்கு உதவிபுரியும்பொருட்டு இவ்விந்தியாவிலிருந்துபோன தமிழ் கத்தோலிக்குக் கிறீஸ்துவர்களில் சுமார் 40 பேர் மெசொபொட்டேமியாவி லிருக்கிறார்களென்று, அவ்வூரிலிருந்து ஒரு குருவானவர் நமக்குச் சமீபத்தில் எழுதிய கடிதத்தால் தெரியவருகிறது. இந்த நல்ல கிறீஸ்துவர்கள், தங்கள் அலுவல் நேரம் தவிர மற்ற ஒய்வுகாலங்களில், அங்கிருக்கும் அர்ச். உபகார மாதா கோவிலுக்குப் பலவிதமாய் உதவி புரிந்துவருகிறார்களாம். இவர்கள் அக்கோவிலில் உள்ள சிலுவைப்பாதைப் படங்கள் பதினான்குக்கும், வேறு நான்கு படங்களுக்கும் அழகான சட்டங்கள் போட்டுத் தந்தார்களென்றும், இப்போது அவ்விடத்தில் உபயோகப்படுத்தப்பட்டு வரும் நேர்த்தியான தேவநற்கருணைப் பெட்டி அவர்களால் செய்யப்பட்டுச் சித்திரிக்கப்பட்டதென்றும் ஷை சுவாமியார் மிக்க நன்றியறிந்தவராய் சந்தோஷத்துடன் தெரிவிக்கிறார். ஷை நமது தமிழ் கிறீஸ்துவ சகோதரர்களும், சுவாமியாரும் தேவனருள்பெற்று நீடூழி வாழக்கடவார்களாக. இப்போது இவர்களும், இன்னும் எண்ணிலடங்காத ஏனைய சகோதரர்களும் தங்கள் உயிரைத் திரணமாயெண்ணி ஏகோபித்து உழைத்துவரும் மகா யுத்தத்தில் வெற்றிபெற்று ஜெயசீலராய்த் தங்கள் தங்கள் ஊர்களுக்குத் திரும்பிப்போய் தங்கள் தங்கள் குடும்பத்துடன் சேர்ந்து சந்தோஷிக்கும்படி கடவுளைப் பார்த்து நாமெல்லோரும் மன்றாடுவோமாக!

ருஷியா.—இத்தேசத்தில் குழப்பங்களுண்டாகி ஜனங்கள் பல கட்சிகளாய்ப் பிரிந்து ஒரு கட்சியார் இன்னோர் கட்சியார்மேல் படையெடுத்து வாளுக்கிரையாகி வருகிறார்கள். என்ன நிற்பாக்கியம்! துரைத்தனம் எவ்விடத்திலிருக்கிறதென்றும், துரைத்தனத்தின் அதிகாரிகள் யாரென்றுந்தெரிய வில்லையாம்.

மண்ணும் தின்பண்டமாயிருக்கிறது.—பீஜீ தீவிலுள்ளவர்கள் ஒருவித மண்ணைத் தின்கிறார்களாம். அதை நம்முடைய தேசத்திலிருந்து அவ்விடத்துக்குப் பிழைக்கப்போயிருக்கிறவர்களும் ஆசையாய்ச் சாப்பிட்டுவருவதாக சொல்லப்படுகிறது. அது மாவைப்போல் மெதுவாயும் சில விராட்டி முட்டை சாம்பரைப்போல் சிவப்பாயுமிருக்கின்றதாம்.

DOMESTIC OCCURRENCES.
குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 2-ரூபாயும், முழுக்கலத்துக்கு 4-ரூபாயுமாக முன்பணம் அனுப்பினாலன்றி, குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட மாட்டா. ப—ர்.

ஜனன அறிக்கை.

கண்ணனூர்.

என் மனைவியும், கண்ணனூர் நிவாசிகராயிருந்து நீலகிரி வெலிங்கடன் ஆபீஸர் மேசையில் ஒயின் கூலராகவுமிருந்து சாலஞ்சென்ற D. Salomon அவர்களின் புத்திரியுமாகிய ஆரோக்கியமரியம்மாள் தன் 5-வது பெண் மகவைக் கர்த்தர் கிருபையினால் யாதொரு கஷ்டமுமின்றி சென்ற டிசம்பர்மீ 26உ செவ்வாய்க்கிழமை பிரசவித்தனள். மேற்படி குழந்தைக்கு ஜனவரி மாதம் 6 தேதி யிவ்விடம் சாம்பியன் ரீப்ஸ் அர்ச். ஜெயமாதாவினாலயத்தில் சங்கை பெவின் குருவானவரால் திரேசம்மாள் என்னும் பெயரிடப்பட்டு ஞானஸ்நானங் கொடுக்கப்பட்டது. மேற்படி தாயையும் பிள்ளையையும் நல்ல சுகமுடன் வைத்துக் காப்பாற்ற ஆண்டவர் கிருபை செய்ததற்கு அவருக்கு எங்களுடைய நன்றியறிதலான ஜெபத்தை ஒப்புக்கொடுக்கிறோம்.

இங்ஙனம் அடியேன்

ஜோசப்.

VICOMA BALM ! VICOMA BALM !
விக்கோமா பாம் ! விக்கோமா பாம் !

காலஞ்சென்ற சங் ஹாஸ் சுவாமிகளின் ஞாபகார்த்தமாய் ஏற்படுத்தப்பட்டது.

இடுப்புவலி, பக்கசூலை, பாரிசவாய்வு, தொண்டைநோய், தலைவலி, இருமல், கைகால் பிடிப்பு முதலிய நோய்களுக்கு எற்ற வெளிப்பூச்சு தைலம்; தவறாத ஆரோக்கியம் தரத்தக்கது. மற்றெல்லாவித தைலத்தைவிட மேலானது. இதை யுபயோகித்துப் பார்த்தவர்களுக்கே இதன் அருமை நன்கு விளங்கும். கத்தோலிக்குக் கிறீஸ்துவர்கள் வேறு வித தைலத்தை வாங்குமுன் இதை ஒரு விசையாவது வாங்கி பரீட்சித்துப் பார்ப்பார்களாக.

விலை ஒரு டப்பி பாம் அணா 10. தபாற்கூலி பிரத்தியேகம். இதை யுபயோகிக்கும் விவரமடங்கிய துண்டு பத்திரம் மருந்துடன் சேர்த்து அனுப்பப்படும். வெளியூர் ஆர்டர்களுக்கு விசேஷ கவனஞ் செலுத்தப்படும்.

எம். பி. குழந்தைசாமி பிள்ளை,
2/74 செம்பர் வீடு, பிராட்வே, மதராஸ்.

சென்னப்பட்டணத்தில் கத்தோலிக்கருக்கு சத்திரம்.

சென்னப்பட்டணத்தில் கத்தோலிக்கருக்கு ஒரு சத்திரம் தேவையென்பது நெடுநாளாய் அனுபவித்துவந்த குறை. வெளியூரிலிருந்து வரும் கத்தோலிக்குச் சகோதரர்கள் தங்க விடமின்றி தவிக்கவேண்டியதாயிருப்பது எல்லோருக்குந் தெரிந்தவிஷயம்.

இக்குறையை நிவர்த்திக்க மயிலாப்பூர் மேற்றிராணியாருடைய அநுமதியின்பேரில் சங். எல். எக்ஸ். பெர்நாந்திஸ் சுவாமிகளின் தலைமை வகித்து ஒரு கமிட்டி சென்னையி லேற்பட்டிருக்கிறது. இக் கமிட்டியாரால் சிறுகச் சிறுக இதுவரையில் சேகரித்திருப்பது ரூ. 1.140—15—0 இத்தொகையைக் கொண்டும், கமிட்டி மெம்பரில் ஒருவருடைய கடன் கொண்டும் ரூ. 1,400 க்கு ஒரு சிறு இடம் வாங்கப்பட்டிருக்கிறது. இதில் ஒரு தக்க சிறு வீடாவது கட்டிமுடிக்க குறைந்தது ரூ. 5,000 ஆவது வேண்டும்.

இக்கருத்துக்காக கத்தோலிக்குச் சகோதரர்கள் தங்கள் தங்களால் கூடிய தொகையை அடியிற்கண்ட விலாசத்துக்கு அனுப்பி இப்பொதுநலக்காரியத்துக்கு உதவி புரிவார்களென கோரப்படுகிறது.

	ரூ.	அ.	பை.
ஏற்கெனவே வரவேற்றுக் கொள்ளப்பட்ட தொகை	1,298	15	0
பந்தர் தெருவு சுருட்டு வியாபாரிகள் (பிப்ரவரிமீ த்துக்கு) ...	30	0	0
ஆக மொத்தம்	1,328	15	0

Rev. Fr. L. X. FERNANDEZ,
North Georgetown,
Madras, E.

அர்ச் அந்தோனியார் கோவில் கட்டிட தருமம்.

சென்னை, மவுன்ட்ரோட் "நேப்பியர்" சிங்காரத்தோட்டத்தருகாமையில் அர்ச். அந்தோனியார் பேரால் அவருடைய பக்தர்களின் உதவியைக்கொண்டு நாம் கட்டிவந்த ஷெ கோவில் ஒருவாறு முடிவாகி, சென்ற டிசம்பர்மீ 23உ மிகவும் சங்கைக்குரிய எமது அதிமேற்றிராணியாரால் மந்திரிக்கப்பெற்று அடுத்த நாளாகிய ஞாயிற்றுக்கிழமையன்று அவரால் அவ்வாலயத்தில் பெரிய பாடற்பூசை செய்யப்பட்டதென்று மிக்கச் சந்தோஷத்துடனும் வந்தனத்துடனும் இதனால் ஷெ உபகாரிகள் எல்லோருக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அர்ச். அந்தோனியாருடைய பக்தர்களே! இத்துடன் கோவில் வேலை முடிந்து போய்விட்டதென்று நினையாதீர்கள். தெய்வ பணிவிடைக்கேற்ற பூசைப் பாத்திரங்கள், பூசை வஸ்திரங்கள் முதலிய சாமான்கள் தேவையாயிருக்கின்றன. மேலும் பங்கு ஸ்வாமியார் வசிக்க ஒரு சிறு விடுதியும் அவசியம். இவைகளுக்காக மதிப்பிடப்பட்டிருக்கிற தொகை குறைந்தது 2,000 ரூக்கு மேலாகும்—ஆகவே, நீங்கள் இதுகாறும் எமக்குக் கைகொடுத்து உதவினதுபோல இப்பவும் உதவி செய்வீர்களென்று நம்பியிருக்கும்,

புதுப்பேட்டை, சென்னை. } உங்கள் நன்றியறிதலுள்ள
சங். அருளப்பநாத சுவாமிகள்.

இதுவரையிலும் வரவேற்றுக் கொள்ளப்பட்ட தொகை	4,626 11 6
Mr. R. J. நிக்கொலாஸ் (கோலார் கோல்ட்பீல்ட்ஸ்)	5 0 0
,, S. ஜெகராவு நாய்க்கர் (குலாலம்பூர்)	2 2 0
ஆக மொத்தம்,	4,633 13 6

குடியர்களை குணமாக்கும் அற்புத "லிக்கோரின்." "Likkorin."

"லிக்கோரினை" எந்தப் பானத்திலும் கலந்து குடிகாரருக்கும் அபினி தின்போருக்கும் இரகசியமாகத் தெரியாமல் கொடுப்பதில் குடியையும் கள்ளையும் ஆயுளுள்ளளவும் விட்டுவிடுகிறார்கள். பரீட்சைக்கும் பயனுக்கும் உத்தரவாதம். நூற்றுக் கணக்கான நற்சாட்சிப் பத்திரம் பெற்றது. பத்தியமே கிடையாது. 25, 27, 30 வருஷ நெடுங்காலக் குடியருக்கு ஒரே புட்டி போதுமானது. யாதொரு கெடுதியும் செய்யாதது. 40-நாள் சாப்பிடக்கூடிய "லிக்கோரின்" புட்டி விலை ரூபா 3—0—0. தபால் கூலி முதலியவை அணா 5, பிரத்தியேகம்.

ஆங்கிலோ இன்டியன் டிரக்ஸ் கம்பெனி,
ஈரோடு, தென் இந்தியா.
Anglo-Indian Drugs Co.,
Erode, South India.

லீலியும் ரோசாவும்.

ஆதி திருச்சபையில் அஞ்ஞான மார்க்கத்திலிருந்து மனம் திரும்பின இரு செல்வமாதுசிரோன்மணிகளைப்பற்றிய சரிதை. 417-பக்கங்கள் அடங்கியது இப்புஸ்தகம். இஃது திருச்சினாப்பள்ளி அர்ச். சூசையப்பர் கலாசாலையில் பேர்பெற்று காலஞ்சென்ற **பிரான்ஸிஸ் பில்லியார்டு** சுவாமியார் அவர்களுடைய ஞாபகத்துக்காக, அவர்களுடைய கிறீஸ்துவ மாணாக்கர்களில் ஒருவரால் எழுதப்பட்டது. புஸ்தகம் வேண்டுவோர் மதுரை சென்ட் மேரிஸ் ஸ்கூல் உபாத்தியாயர் மகா-ா-ா-ஸ்ரீ சூசை கோவிந்தராவுக்காவது அல்லது **நல்லாயன்** அச்சியந்திரசாலை மானேஜருக்காவது எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். தபால்கூலி அன்னியில் இந்தியாவில் எந்த இடத்திற்கும் விலை 12 அணா. இதர நாடுகளுக்கு விலை ரூபாய் 1.

சூசை கோவிந்தராவ், ஏஜண்டு, மதுரை.

நோட்டீஸ்.

(1) முழு வர்ணப்படங்கள் :—(10″×8″, 13″×12″, 17″×13″) டசன் 1-க்கு ரூ 1—2—0, 2—4—0, 3—0—0.

(2) ஜெப புஸ்தகப் படங்கள் :—டசன் அணா 0—4—0. 100-க்கு ரூ 1—12—0.

(3) கழுத்தில் போடக்கூடிய அலுமீனும் சாதா சுரூபங்கள், உத்தரிய சுரூபங்கள், டசன் அணா 0—6—0 முதல் ரூ 1—14—0 வரையிலும்.

(4) கருப்பு உத்தரியம் (உயர்ந்த சகலாத்தில்) குரோஸ் ஒன்றுக்கு ரூ 4—0—0. நீல உத்தரியம் (உயர்ந்த சகலாத்தில்) குரோஸ் ஒன்றுக்கு ரூ 6—0—0.

(5) பாடுபட்ட சுரூபங்கள், (பல வகையிலும்) 1″ முதல் 6″ வரையிலும் டசன் ரூ 1—2—0 முதல் ரூ 6—0—0 வரையிலும்.

(6) ஜெபமாலைகள் :—(மரக்கொட்டை) டசன் ரூ 1—12—0 முதல் ரூ 2—0—0 வரையிலும். (போர்சலின்) ரூ 1—8—0 முதல் ரூ 4—8—0 வரையிலும்.

(7) 8″ உயரமுள்ள சுரூபங்கள் :—(அர்ச். அந்தோனியார், அர்ச். சூசையப்பர், லூர்து மாதா, தேவமாதா) ஒன்றுக்கு ரூ 1—4—0.

(8) தீர்த்தத்தொட்டி :—சம்மனசு முகத்துடன், பூ. சிலுவை உள்பட உயரம் $1\frac{1}{4}$ அடி 1—8—0.

இன்னுமற்ற சாமான்களும் விற்பனைக்குத் தயாராயிருக்கிறது. வேண்டியவர்கள் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதினால் வி. பி. மூலமாய் அனுப்பப்படும்.

எ. புஷ்பம் அண்டு கோ.,
நெ 37, ஆனந்தபுரம்,
திருச்சினாப்பள்ளி.

N. M. SAMI & Co.,

No. 44, Nomboolyar Street, Madras.

சர்வதேள் விஷ சஞ்சீவினி.

(ரிஜிஸ்டர்ட் டிரேட் மார்க்)

பட்ட வுடனே விஷம் பறக்கும்! அழுதவன் சிரிப்பான்!!

இதில் குணமில்லையென்று நிரூபிப்பவர்க்கு

100-ரூபாய் பரிசளிக்கப்படும்.

நமது நாட்டிற்கு இது அவசியமாய் ஒவ்வொரு குடும்பத்திலும் சதா கையில் இருப்பாய் இருக்கவேண்டிய ஓர் ஔஷதமாகும். இது ஆங்கில யூனனி தமிழ் வைத்திய நிபுணர்களால் நன்கு மதிக்கப்பட்டுள்ளது. நாள்பட வைப்பதால் குணம் சற்றும் குறையாது. தேள், நட்டுவாக்காலி, செய்யான், பாம்பு. எலி முதலிய விஷங்களை இரண்டொரு நிமிஷங்களில் அடியோடு நீக்கக் கூடியது. எண்ணிறந்தோர் இதனால் சுகமடைந்தது பிரத்தியட்ச அனுபவமானதால் இதைப்பற்றி நாம் அதிகம் கூறவில்லை. இது இரண்டு வித மருந்துகளடங்கியது. உபயோகிக்கும் முறை மருந்தோடு அனுப்பப் படும்.

விலை:—இரண்டுவித மருந்தும் அடங்கிய பாக்கெட் 1-க்கு ரூ. 0 8 0

ஷை தபாற்கூலி 0 3 0 டஜன் 1-க்கு ரூ. 5 0 0

ஏக காலத்தில் 2-பாக்கெட் வாங்கினால் தபாற்கூலி இனாம்.

வர்த்தகர்களுக்கு 100-க்கு 25-சமிஷன்.

சிவப்பிரகாச பல்பொடி

இந்தசிவப்பிரகாச பல்பொடி மற்ற இதர பல்பொடிகளைப்போலிரா மல் அதிகசுகந்தமாயும் பல்வலி, பல்லில்சொத்தை, ஈர்வளர்ந்திருத்தல். வாய் ரணம், வாய்நாற்றம், பல்லாட்டம் முதலியவியாதிகளை சொஸ்தப்படுத்துவது மல்லாமல் பல் நன்றாய் துலங்கும்படிச் செய்யும். வாயிற்கு சதா கம கம வென்று பரிமளத்தைக் கொடுக்கும். ஒரு மாதத்திற்கு உபயோகிக்கக்கூடிய பல்பொடி டப்பி 1-க்கு விலை அணா 2.

6 டப்பி விலை அணா 10.

வி. பி. தபாற்கூலி 1-முதல் 6-டப்பிவரை அணா 5.

கிருஷ்ணா சஞ்சீவி.

தலைநோய், பாரிசவாய்வு, சுளுக்கு, புண்கள், காயங்கள், வீக்கங்கள். கொப்பளங்கள், கட்டிகள், இருமல், மூச்சடைப்பு, தேள்கொட்டின விஷம் இவைகளுக்குத் தேவதாப்பிரசாதம். நோய்கண்ட இடத்தில் இந்த கிருஷ்ண சஞ்சீவியை நன்றாய் இரண்டு மூன்று நிமிஷம் தேய்த்தால் உபாதை மாயமாக பறந்து ஓடிவிடும். இதற்கு சமமான மருந்து வேறே எதுவுங் கிடையாது. இளங் குழந்தைகளுக்குக் காணும் சைத்திய நோய்களுக்கு உபயோகிக்கலாம். ஆயிரக்கணக்காகச் செலவழிந்துகொண்டு வருகிறது. ஒவ்வொரு க்ருஹத்திலும், பிரதிபிரயாணிகள் கையிலும் இந்த கிருஷ்ண சஞ்சீவி இருந்தே தீரவேண்டும்.

இதன் விலை புட்டி 1-க்கு அணா **8.**

டஜன் 1-க்கு ரூபா **5—0—0.**

கண் மருந்து.

கண்நோய், கண்குத்தல், கூசல், நீர்வடிதல், மங்கல், அந்திமாலை, பூளை கட்டல், சதை வளர்ந்திருத்தல், கண்சிவப்பு, எரிச்சல், கண் இமைபுருவம் இவைக ளில் வலி, கண் புகைச்சல் இவைகளை குணப்படுத்தும். மாணாக்கர்களுக்கும் ஆழ்ந்த பார்வையோடு வேலை செய்பவர்களுக்கும் வெகு சிறந்த அவுஷதம். இதை உபயோகித்தால் கண்ணாடி போடவேண்டியதில்லை. புட்டி 1க்கு அணா 8.

எமது விலாசம்:—

என். எம். சாமி அண்டு கம்பெனி,
நெ. 44, நம்புலையர் தெருவு, மதராஸ்.